பக்கங்கள்: 17

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 22 புதன்கிழமை 07.08.2024 கதிர் 273

# போட்டியிலிருந்து தம்மிக்க விலகல் பெரமுனவின் வேட்பாளர் நாமலே

## இன்று அறிவிப்பு வருகிறது



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதிவேட்பாளர்போட்டியிலிருந்து தாம் விலகுகிறார் என்று வர்த்தகர் தம்மிக பெரேரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசத்திற்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தனிப்பட்ட காரணங்களுக்காக தாம் குறித்த முடிவை எடுத்துள்ளார் என்று தம்மிக பெரேரா தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இன்று காலை ☞2

## இது ரகசியம் அல்ல!

தமிழ் பொது வேட்பாளர் யார் என்பது இன்று அறிவிக்கப் படவேண்டும். பட்டியலில்கடைசியாக அரியநேந்திரனின் பெயர்தான் இறுதி செய்யப்பட்டிருப்பதாக அறியமுடிகின்றது. ஆனால் அவர் பொதுவேட்பாளரானால் அவரைக் கட்சியைவிட்டு உடனடியாகத் தூக்குவது என்று தமிழ் அரசுக் கட்சிக்குள் தீவிரமாகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

பொதுவேட்பாளராக அரியநேந்திரனோ அல்லது தவராசா அண்ணையோ போனால் அவர்களைக் கட்சியைவிட்டு வெளியேற்றியே தீருவோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் நேற்று நாடாளுமன்றத்தில் வைத்து யாரிடமோ தொலைபேசியில் கூறிக்கொண்டிருந்ததைக் கேட்கமுடிந்தது என்று கிழக்கைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர்தெரிவித்தார். ஆகமொத்தத்தில் அவர்களுக்குக் கட்சிக்குள் ஆப்பு ரெடியாக இருக்கின்றது.

மறுபுறத்தில் பொதுக் கட்டமைப்புக்குள் இவர்களில் ஒருவரை பொது வேட்பாளராக ☞2

## சஜித்தை இலக்கு வைத்தே செயற்படவேண்டும் பெரமுன

### கட்சியினருக்கு நாமல் அறிவுறுத்து

வரவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் சஜித்பிரேமதாசவை இலக்குவைத்துச் செயற்படுமாறு பொது ஜன பெரமுன கட்சியினருக்கு நாமல் ராஜபக்ச அறிவுறுத்தியுள்ளார்.

ஸ்ரீலங்காபொதுஜனபெரமுனவினது நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட தலைவர்களுடனான சந்திப்பின்போது அவர்களுக்கு இவ்வாறு அவர் அறிவுறுத்தினார்.

ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெறவேண்டும் என்ற நோக்கத்துடன் செயற்படுமாறும் வலியுறுத்திய அவர், முக்கிய எதிராளியாக எதிர்கட்சி தலைவரை இலக்குவைக்கவேண்டும் என தெரிவித்துள்ளார்.

கட்சியிலிருந்து விலகியவர்களை விமர்சிக்கவேண்டாம் என வேண்டுகோள் விடுத்துள்ள நாமல்ராஜபக்ச விலகிச்சென்றவர்களைக் கடந்த காலங்களில் ஐக்கியதேசிய ☞2

## அலங்கார மீன் வளர்ப்பு மூலம் பெருமளவு வருமான வாய்ப்பு

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

அலங்கார மீன் வளர்ப்புத்தொழில்மூலம் பெருமளவு வருமானம் ஈட்டப்படுவதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் மிலான் ஜயதிலக எம்பி எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் 7,974 பேர் அலங்கார மீன் வளர்ப்புத் தொழில் மற்றும் அது சம்பந்தமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்கான அனைத்துசலுகைகளும் ஊக்குவிப்புகளும் வழங்கப்படுகின்றன.

அந்த வகையில் 2019 ☞2

## நாமலுக்கு பதிலாக பிரேம்நாத்

நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி நாமல் ராஜபக்ச சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக்குழுவிலிருந்து இராஜினாமாசெய்தமையின் காரணமாக ஏற்பட்ட குழுவின் வெற்றிடத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த அக்குழுவில் பணியாற்றுவதற்காக நியமிக்கப்பட்டுள்ளார்.

நாடாளுமன்றம்நேற்றுக் கூடியபோது சபாநாயகர் மஹிந்த யாபா அபேவர்தன இதனை நாடாளுமன்றுக்கு அறிவித்தார்.

நாடாளுமன்ற நிலையியற் கட்டளை 130(3) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் 2024 ஓகஸ்ட் 2 தெரிவுக்குழுவினால் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதாக சபாநாயகர் இதன்போது அறிவித்தார்.

அத்துடன் சட்டமூலங்களை சான்றுரைப்படுத்தல் பற்றிய அறிவிப்பையும்அவர் விடுத்தார்.

அதன் பிரகாரம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 79 ஆம் இலக்க உறுப்புரையின் பிரகாரம், 2024 யூலை 26 ஆம் திகதி 'சமாதி தியானம் மற்றும் யோகா நிலையம் (கூட்டிணைத்தல்)' எனும் சட்டமூலத்திலும் 2024 ஓகஸ்ட் 02 ஆம் திகதி 'குடியியல்நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்)' மற்றும் 'மாத்தறை பருவகால ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்)' ☞2

## காலிதா ஷியாவை முன்பே விடுவித்திருந்தால் ஹஷீனா பிரதமராகத் தொடர்ந்திருக்க முடியும்

### பங்களாதேஷ் சிக்கல் குறித்து ஜனாதிபதி கருத்து

பங்களாதேஷின் முன்னாள் பிரதமர் காலிதா ஷியாவை நீண்ட காலத்திற்கு முன்பே விடுதலை செய்திருந்தால் இப்போது பதவி விலகியிருக்கும் பிரதமர் ஷேக் ஹசீனா பதவியில் நீடித்திருக்க முடியும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு சினமன் கிரேண்ட் ஹோட்டலில் நேற்று முற்பகல் ஆரம்பமான 2024ஆம்ஆண்டுக்கான சுற்றாடல், சமூக மற்றும் ஆளுகை மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

'பிரகாசமான எதிர்காலத்திற்கான நிலையான பாதை' என்ற தொனிப் பொருளின்கீழ்கொழும்பு பல்கலைக்கழக வணிக நிர்வாக முதுகலை பட்டதாரிகளின் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மாநாடு நாள் முழுவதும்நடைபெற்றது.

பங்களாதேஷில் நீண்ட நாள்களாகத் தொடர்ந்த மாணவர்களின் கிளர்ச்சியைத் தொடர்ந்து பிரதமர் ஷேக் ஹசீனா பிரதமர் பதவியிலிருந்து விலகினார். அவர்நாட்டைவிட்டு வெளியேறி இந்தியாவில் தஞ்சம் அடைந்துள்ளார். லண்டனில் புகலிடம் கோரிச்செல்லும் ☞2

## மாவட்ட தேர்தல் அலுவலகங்களுக்கு தலா 11 பொலிஸ் அதிகாரிகள் நியமனம்

ஜனாதிபதித் தேர்தலில், மாவட்ட தேர்தல் அலுவலகங்கள் சுமுகமாக இயங்குவதை உறுதி செய்வதற்கும் தேர்தல் தொடர்பான சம்பவங்களைகட்டுப்படுத்துவதற்கும் பொலிஸார் குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதற்கமைவாக 22 மாவட்ட தேர்தல் அலுவலகங்களுக்கும் தலா 11 பொலிஸ் உயர் அதிகாரிகள்நியமிக்கப்பட்டுள்ளனர். தேர்தல்முறைப்பாடுகளை விசாரிப்பதற்கும் அலுவலகங்களின் செயற்பாடுகளை திறம்பட ஒருங்கிணைப்பதை உறுதி செய்வதற்கும்பொறுப்பாக இந்த அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குழுவில் ஒரு பிரதிப் பொலிஸ் ☞2

## இந்திய மீனவர்கள் 19 பேர் நேற்று நீதிமன்றால் விடுவிப்பு

### 2 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களில் 19 பேர் நேற்றுஒத்திவைக்கப்பட்ட தண்டனையுடன் விடுவிக்கப்பட்டனர்.

இலங்கைக்கடற்பரப்புக்குள் ஊடுருவிய 31 இந்திய மீனவர்களுக்கு எதிரான வழக்கு நேற்று ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது ஜூன் 22ஆம் திகதி 3 படகுகளில் எல்லை ☞2

## சுமந்திரன் எம்.பி. முன்வைத்த மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டமூலம் விவாதமின்றி 2ஆம் வாசிப்பைக் கடந்தது

தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் தனிநபர் பிரேரணையாக முன்வைக்கப்பட்ட மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்டமூலம் நீண்டகாலத்தின் பின்னர் நாடாளுமன்றத்தில் 2ஆம் வாசிப்பில் நேற்று நிறைவேற்றப்பட்டது.

மாகாண சபைத் தேர்தல்களை பழைய முறையில், அதாவது விகிதாசாரத் தேர்தல் முறையிலேயே நடத்தி மாகாண சபைகளை மீள இயங்கப் பண்ணுவதற்காக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இந்தத் தனிநபர் சட்டமூலத்தைச் சமர்ப்பித்திருந்தார்.

இந்தத் தனிநபர் சட்டமூலம்நேற்றுஅதன் இரண்டாம்வாசிப்புக்காக நாடாளுமன்றத்தில் எடுக்கப்பட்டது. ஒருசில நிமிடங்களிலேயே விவாதம் இன்றி - வாக்கெடுப்பு இன்றி அதுநிறைவேற்றப்பட்டது.

இந்தச் சட்டமூலம் தொடர்பாக உயர்நீதிமன்றம் செய்துள்ள பரிந்துரைகளைச் சட்டமூலத்தில் திருத்தங்களாகச் செய்வதற்காக அது நாடாளுமன்றத்தின் சட்டங்களுக்கான நிலையியற் குழுவுக்கு அனுப்பப்படுகின்றது. நிலையியற் குழுவின் திருத்தங்களோடு பெரும்பாலும் இம்மாதம் மூன்றாம் வாரத்தில் அது மீண்டும் நாடாளுமன்றத்தில் ☞2

## முதியோரின் வங்கி வைப்புகளுக்கு 15 வீத வட்டியை மீண்டும் வழங்குக

### எதிர்க் கட்சித் தலைவர் நாடாளுமன்றில் வலியுறுத்து

முதியவ்கள் மற்றும் ஓய்வூதியர்களின் வங்கி வைப்புக்களுக்கு மீண்டும் 15 சதவீத வட்டியைவழங்க ஆளும் தரப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித்பிரேமதாசவலியுறுத்தினர்.

நாடாளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். அவர் ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

நிறுத்தியதன் பின்னர் அவர்கள் மீண்டும் அரசியல் செய்வதற்கு அனுமதிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை ஏற்பதற்கு தமிழ் மக்கள் பொதுச் சபையினர் பின்னடிக்கிறார்கள். அந்தக் கோரிக்கையைஏற்றுக்கொண்டால் தமது அடிப்படைச் சித்தாந்தமே தகர்ந்துவிடும் என்று அவர்கள் அஞ்சுகின்றார்கள். அப்படிச்செய்தார் ''பேஸ்மென்ட் வீக்கானவர்கள்'' என்று சகட்டுமேனிக்குத் தம்மை விமர்சிப்பார்களே என்கிற அச்சம் அவர்களுக்கு. இந்த இரண்டுக்கும் நடுவே பொது வேட்பாளர் அறிவிப்பு இன்று வெளியானால் அதுவே பெரும் சாதனைதான்.

இதற்கிடையில், தமது கட்சியின் சார்பில் வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்படுவார் என்று ஈபிஆர்எல்எவ் கட்சியினால் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஆணைக் குழுவின்வழக்கமானகடிதத்துக்குப் பதில் அனுப்பப்பட்டுள்ளது என்று அந்தக் கட்சியின் சார்பில் சாதாரணமாகப்பதிலளிக்கப்பட்டாலும் எந்தக் கட்சியின் சார்பில் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவது என்பதைப் பொதுக் கட்டமைப்பு இறுதி செய்யாத நிலையில் (சுயேச்சையாகப் போட்டியிடுவதா கட்சியில் போட்டியிடுவதா என்பதே முடிவில் இல்லை) ஈபிஆர்எல்எவ் தமது கட்சியின் சார்பில் வேட்பாளர் நிறுத்தப்படுவார் என்று முன் அறிவித்தல் தந்திருப்பது இன்னும் குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளது.

அதேநேரம், தமிழ் பொது வேட்பாளரைநிறுத்துவதற்குத்தான் ஆதரவில்லைஎன்றுதிங்கட்கிழமை அறிவித்திருந்த ரெலோவின் நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம்நேற்றுதனதுமுகப் புத்தகத்தில் பொது வேட்பாளரை நிறுத்தாமல் இருப்பதே நல்லது என்று தெரிவித்திருக்கிறார். ''இன்னொரு தோல்வியை இரசிக்க காத்திருக்கும் எம்மவர் கூட்டத்தை ஏமாற்றி, அவமானப்படுத்த ஒரே வழி தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தாதிருப்பதே'' என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

தமிழ்க் கட்சிகளையும் அதன் தலைவர்களின் குணங்களையும் நன்கறியாமல்தமதுதிறன்மீதுஅதீத நம்பிக்கைவைத்துச்செயற்பட்டதன் விளைவை தமிழ் குடிமைச் சமூகத்தினரும்மோதாவிகளும்மிக விரைவில் உணர்வார்கள் என்றே எண்ண முடிகின்றது. இன்னும்ஒரு வாரம் பொறுத்திருந்தால் இவை எல்லாவற்றுக்குமான சுப முடிவும் தெரிந்துவிடும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## போட்டியிலிருந்து ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பத்தரமுல்லையில்உள்ளஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அலுவலகத்தில் அக்கட்சியின் வேட்பாளர் யார் என்பது தொடர்பான அறிவிப்பு வெளியிடப்படவுள்ளதாக, கட்சியின் நிறுவுனரான பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அதற்கமைய ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளராக உள்ள நாமல் ராஜபக்ஷ எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கானஸ்ரீலங்காபொதுஜன பெரமுனவின வேட்பாளராக அறிவிக்கப்படவுள்ளதாக அக்கட்சி வட்டாரதகவல்கள்தெரிவிக்கின்றன.

ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்கவும் இதனை உறுதிப்படுத்தியுள்ளார். பஸில் ராஜபக்ஷவும் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

அதற்கேற்றாற் போல், நாமல் ராஜபக்ஷவின் பல்வேறு புதிய அரசியல் ரீதியான புகைப்படங்கள் தற்போது இணையத்தில்வெளியாகி வைரலாகி வருகின்றன.

## முதியோரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவித்ததாவது:

ஓய்வூதியர்கள் மற்றும் முதியோர்களுக்குவழங்கப்பட்டுவந்த விசேட 15 சதவீத வட்டி வீதத்தை குறைத்து அதனை 7.15 சதவீதம் வழங்க ஆளும் தரப்பு நடவடிக்கை எடுத்திருந்தது. 2016இல் இருந்து 2020வரை இதனை செயற்படுத்துவதாகவும் அரசாங்கம் தெரிவித்திருந்தது. இருந்தபோதும் இந்த வட்டி வீதத்தை மீண்டும் 15 வீதமாக அதிகரித்துக்கொடுக்க ஆளும்தரப்பு தவறி இருக்கிறது.

முதியோர்கள் மிகவும் கஷ்டத்துக்கு மத்தியில் வங்கிகளில் சேமிக்கும் பணத்துக்கு கிடைக்கப் பெறும் வட்டியை கொண்டே தங்களின் வாழ்க்கையை கொண்டு செல்கின்றனர்.

அவர்களின் இந்த 15 சதவீத வட்டி வீதத்தை வழங்குவதாக ஆளும்தரப்பு இந்த சபையில் பல தடவைகள் தெரிவித்திருக்கிறது. ஆனால் செயற்படுத்தவில்லை. அமைச்சர் ஒருவர் இந்த சபையில் பொறுப்புடன் ஒரு விடயத்தை தெரிவித்தால், அதனை செயற்படுத் தவேண்டும்.

அத்துடன் கோட்டாபய ராஜபக்ச ஆளும்தரப்பு அதிகாரத்துக்கு வந்த பின்னர் முதலாவதாக எடுத்த தீர்மானம், ஒரு இலட்சத்தி 21 ஆயிரம் ஓய்வூதியர்களின் வட்டி வீதத்தை 2016இல் இருந்து 2020வரை குறைப்பதாகும். இந்த ஓய்வூதியர்களில் சிலர் தற்போது உயிருடன் இல்லை.

அதேபோன்று கிராம சேவகர் களின் சேவை பிரமாணக்குறிப்பு மற்றும் சம்பள முரண்பாட்டை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கு மாறு இந்த சபையில் தொடர்ந்து தெரிவித்து வந்தேன். கிராம சேவை அதிகாரிகளுடன் கலந்துரையாடி இணக்கப்பாட்டுக்கு வந்த சேவை பிரமாணக்குறிப்புக்கு பதிலாக அமைச்சருக்கு, அதிகாரிக ளுக்கு தேவையான சேவை பிரமா ணக்குறிப்பையே அனுமதித்துக் கொள்ள அனுப்பப்பட்டிருக்கிறது.

அமைச்சர்கள் இந்த சபையில் அனைத்துக்கும் இணக்கம் தெரிவிக்கின்றனர். ஆனால் அவற்றை செயற்படுத்துவதில்லை. அதனால் ஓய்வூதியர்கள் மற்றும் முதியோர்களுக்கான விசேட 15 வீத வட்டியை பெற்றுக்கொடுக்க ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## மாவட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மா அதிபர் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உட்பட 10 அதிகாரிகள் இடம்பெற்றுள்ளனர். சிலாபம், ஆராச்சிக்கட்டுவ மற்றும் குளியாப்பிட்டிய ஆகிய பகுதிகளில் இருந்துதேர்தல்தொடர்பானமூன்று முறைப்பாடுகள் பொலிஸாருக்கு கிடைத்துள்ளன.

தொலைபேசி மூலம் மிரட்டல் விடுத்தல், சுவரொட்டி தொடர்பாக தகராறு, சட்டவிரோதமாக சுவரொட் டிகளை ஒட்டுதல் ஆகிய மூன்று சம்பவங்கள் குறித்தே இவ்வாறு முறைப்பாடு கிடைத்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அலங்கார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆம் ஆண்டு 548.8 மெற்றிக் தொன் அலங்கார மீன்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. அதன் மூலம் 2908 .3 மில்லியன் ரூபா வருமானமாக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் 2020 ஆம் ஆண்டில் 2408.7 மில்லியன் ரூபா, 2021 ஆம் ஆண்டில் 4183.6 .மில்லியன் ரூபா ,2022 ஆம் ஆண்டில் 7135 .5 மில்லியன் ரூபா, 2023 ஆம் ஆண்டில் 8631.1 மில்லியன் ரூபா மற்றும் இந்த ஆண்டில் கடந்த ஆறு மாதங்களில் 3236. 2 மில்லியன் ரூபாவும் வருமானமாக பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்றார்

## நாமலுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனும்சட்டமூலங்களிலும்தன்னால் சான்றுரை எழுதப்பட்டதாக அவர் அறிவித்தார்.

## சஜித்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சி பல முறை விமர்சித்துள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்திக்கு எதிரான ஐக்கியப்பட்ட அணுகுமுறையைப் பின்பற்றவேண்டும் என வேண்டு கோள் விடுத்துள்ள நாமல் ராஜபக்ச கட்சி உள்விவகாரங்கள் குறித்துக் கவனம் செலுத்துவதைவிட ஐக்கிய மக்கள்சக்திக்குஎதிரானபரப்புரையில் கவனம்செலுத்தவேண்டும்எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## மாகாண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூன்றாம் வாசிப்புக்காகச் சமர்ப்பிக் கப்பட்டுசட்டமாகநிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இன்றுஇரண்டாம்வாசிப்புக்காக அது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோது, விமல் வீரவன்ஸ மட்டும் அதற்குத் தம் எதிர்ப்பைப்பதிவுசெய்தார். எனினும் அதற்கு முன்பே சட்டமூலம் நிறைவேற்றப்பட்டு விட்டதாக சபாநாயகர்அவருக்குப்பதிலளித்தார்.

ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து முன்னெடுக்கப்படும் அரசியல் நோக்கம் கொண்ட நடவடிக்கை இது என விமல் வீரவன்ஸ விசனம் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் அவசர மாக ஏன் தற்போது மாகாண சபை தேர்தல்கள் திருத்தச் சட்டமூலத்தை கொண்டு வரவேண்டும். இதன் உண்மை தன்மை என்ன?

கூட்டமைப்பினரது வாக்குளை பெறும் ஒரு குண்டாகவே இந்த திருத்தச்சட்டமூலம்காணப்படுகிறது. இதனால் வடக்கில் வாழும் சிங்கள, முஸ்லிம்மக்கள்பாதிக்கப்படுவார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய சபை முதல்வர் சுசில் பிரேமஜயந்த, மாகாண சபை தேர்தல்கள் திருத்தச் சட்டமூலம்இரண்டாம்வாசிப்புக்காக மாத்திரமே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டமூலத்தை சட்டமாக் குவதற்கு முறையான வழிமுறை களை கையாள வேண்டும். உயர் நீதிமன்றத்தை நாடுவதற்கு வாய்ப்பளிக்கப்படும். குறைபாடுகள் காணப்பட்டால் நீதிமன்றத்தை நாடுங்கள்பிரச்சினைஒன்றுமில்லை - என்றார்.

## இந்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாண்டி வந்து கைதான 22 மீனவர்களில் 19 பேர், ஆறு வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட 24 மாத சிறைத் தண்டனை என்ற அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டனர்.

அத்துடன் படகோட்டிகள் மூவரும் தலா 40 இலட்சம் ரூபா தண்டப்பணம்செலுத்தவேண்டும். இல்லாவிட்டால் 1 வருட கடூழிய சிறை தண்டனையை அனுபவிக்க வேண்டும்என்றுதீர்ப்பளிக்கப்பட்டது.

அடுத்ததாக ஜூலை 23 கைதான 9மீனவர்கள்ஏற்கனவேஒருதடவை விளக்கமறியலில் வைக்கப்பட்ட நிலையில், குற்றப்பத்திரிகை இரண்டாவது தடவையாகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் தொடர்ந்தும் இம்மாதம் 20ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## காலிதா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் அங்கு செல்வதற்கான பயண ஆவணங்கள்தயாராகும்வரையில் தற்காலிகமாக இந்தியாவில் தங்கியிருக்கிறார். இந்த நிலமை குறித்துக்கருத்துத்தெரிவித்தபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி அங்கு தனது உரையில்மேலும்தெரிவித்ததாவது:

கடந்த மூன்று ஆண்டுகளாக பல்வேறுமாநாடுகளில்சுற்றுச்சூழல், சமூகம்மற்றும்ஆளுகைதொடர்பில் கலந்துரையாடிவருவது தொடர்பில் முதலில்நன்றி தெரிவிக்க விரும்புகி றேன். உலகம் எவ்வாறு மாறுகிறது என்பது குறித்தும் பொருளாதாரம், சமூகம் மற்றும் நிர்வாகம் குறித்து தனியார் துறை ஆராய வேண்டும்.

தெற்காசியாவில் உள்ளஅ னைத்து நாடுகளிடையேயும் நமது நாடு சிறந்த நாடு என்றே கூற வேண்டும். மாலைதீவு நம்மைப் போன்ற நாடாகும். ஆனால் அது மிகச் சிறிய நாடு. ஏனைய நாடுகள் அதற்கு தயாராக இல்லை என்று நினைக்கிறேன். எனவே நாம் இதில் முதன்மையானவராக இருக்க வேண்டும்.

இங்கு தனியார் துறையின் பங்களிப்பை நான் பாராட்டுகிறேன். இன்றைய உலகில் புவிசார் அரசியல் நிலைமை எதிர் திசையில் நகர்கிறது என்பதையும் நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். நிலையான வளர்ச்சி இலக்குகள், பரிஸ் காலநிலை மாநாடு மற்றும் கிளாஸ்கோ மாநாடு ஆகியவை பாதியில் தடைப்பட்டுள்ளன. அதன்பிறகுநாங்கள்பெரிய அளவில் முன்னேற்றம் அடையவில்லை.

உலகம் இன்னும் கொவிட் -19 தொற்றுநோயிலிருந்து மீண்டு வருகிறது. சீனாவின் பொருளாதாரம் இன்னும் முழு திறனுடன் செயல்படவில்லை. அதற்குஇன்னும் சில வருடங்கள் செல்லும். உலகின் இரண்டுமுக்கியபொருளாதாரங்கள் மீது நாம் கவனம் செலுத்த வேண்டும். ஐரோப்பா முன்னோக்கி நகர்ந்தாலும் அதில் சிக்கல்களும் உள்ளன. இந்தச் சூழலில்தான் நிலையான வளர்ச்சி இலக்குகள் மீது நாம் கவனம் செலுத்துகிறோம்.

நிலையான அபிவிருத்தி இலக்குகளை நாம் எவ்வாறு அடைவது, அவற்றிற்குநாம்எவ்வாறு நிதியளிப்பது மற்றும் நாடுகள் அவற்றிற்கு எவ்வளவு பணம் செலவழிக்க முடியும்?'சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் ஆளுகை தொடர் பில் எவ்வாறு செயற்படலாம்? டொனால்ட் டிரம்ப் அமெரிக்க ஜனாதி பதியாகதெரிவானால்அதுஒருவெளிப் படையான கேள்வியாகிவிடும்.

ஆனால் பொரிஸ் ஜான்சனின் ஆட்சியின் கீழ் இங்கிலாந்தில் நடந்தது என்பது மிகவும் வருத்தமான விடயமாகும். அவரின் தலைமையின் கீழ் கிளாஸ்கோ மாநாடு நடத்தப்பட்டதோடு அங்கு முன்வைக்கப்பட்ட கொள்கைகளுக்கு அனைவரும் உடன்பாடு தெரிவித்தனர். இரண்டு ஆண்டுகளுக்குள், தோல்வியுற்ற சீர்திருத்தங்களில் இருந்து வலதுசாரி வாக்குகளைப் பெறுவதற்காக ரிசி சுனக் அவை அனைத்தையும்மாற்றினார். இன்று இங்கிலாந்தில்ஒருபுதியஆளும்தரப்பு உருவாக்கப்பட்டுள்ளது. அவர்கள் அதை மாற்ற விரும்புகிறார்கள். ஆனால் இங்கிலாந்திடம் அதற்கானநிதி இல்லை என்பதை நாம்நினைவில்கொள்ளவேண்டும்.

எங்களுக்குக் கிடைக்கும் அனைத்து நிதி குறித்தும் ஆராயப்பட்டுள்ளது. நாம் ஜீநுணே 27, 28, 29 உச்சி மாநாடுகளில் இது குறித்து ஆராய்ந்தோம். எங்களுக்கு எவ்வளவு நிதி கிடைக்கும்? நாங்கள் கடன் உச்சி மாநாட்டிற்காக பரிஸில் சந்தித்தோம், ஆனால் இன்னும் இறுதி முடிவு எட்டப்படவில்லை. இதற்கிடையில், உக்ரைன் மற்றும் இஸ்ரேலுக்கு அமெரிக்கா அதிக பணத்தை செலவிட்டுள்ளது.

அந்த நிதியை இதற்குப் பயன்படுத்தியிருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். இதற்கு ஐரோப்பா செலவிட்ட தொகையைப் பாருங்கள். ரஷ்யா எவ்வளவு பணம் செலவழித்தது என்பது எங்களுக்குத் தெரியாது. அந்த நிதியை எல்லாம் இதற்குப் பயன்படுத்தியிருக்கலாம்.. மத்திய கிழக்கிலும் இதே போன்ற நிலைதான். ஈரான் பதிலடி கொடுக்க விரும்புவதாகத் தெரிகிறது. பழிவாங்கும்தாக்குதல்கள்இலங்கை உட்பட அனைத்து நாடுகளுக்கும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும்.

ஷேக்ஹசீனாபிரதமர்பதவியை விட்டு விலகிய போதிலும், நாங்கள் மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் இருந்தபோது அவர் 200 மில்லியன் டொலர்களை நம் நாட்டிற்கு வழங்கியதை நான் நினைவுகூர வேண்டும்.

சிறையிலிருந்து காலிதா ஷியா விடுதலை செய்யப்பட்டதில் மகிழ்ச்சி அடைகிறேன். ஷேக் ஹசீனா நீண்ட காலத்திற்கு முன்பே இதைச் செய்திருந்தால், அவர் இன்னும் பங்களாதேஷின் பிரதமராக இருந்திருக்க முடியும்.

பங்களாதேஷில் நிலைமை விரைவில் சீரடையும் என்று நம்புகிறோம். குறுகிய காலத்தில் பங்களாதேஷ் மீண்டு வரும் என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை. இலங்கையில்எங்களுக்கு நடந்ததை நினைவில் கொள்ள வேண்டும். பங்களாதேஷின் மிகப்பெரிய முதலீட்டாளர்களில் ஒருவராக நாங்கள் இருப்பதால், அந்தநாட்டில்வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளோம்.

இவ்வுலகில் நிலைமைகள் சரியில்லைஎன்பதைஇந்நிகழ்வுகள் தெளிவுபடுத்துகின்றன. ஆனால்இந்த திட்டங்களில் இருந்து இலங்கை விலகும் என்று அர்த்தமில்லை.


இந்த உலகளாவிய சூழலில், இலங்கையில் 600 ஏக்கர் நிலப்பரப்பில் சர்வதேச காலநிலை மாற்ற பல்கலைக்கழகத்தை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கு சட்டம் தயாரிக்கும் பணிகளை அடுத்த ஆண்டு தொடக்கத்தில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. புதுப்பிக்கத்தக்க எரிசக்திஆற்றல்களைப்பயன்படுத்தி, விவசாயத்தை நவீனமயமாக்குதல் மற்றும் நீர் பற்றாக்குறையால் ஏற்படக்கூடிய பிரச்சினைகளைத் தணித்தல் ஆகியவற்றின் மூலம் 2040ஆம்ஆண்டளவில்நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கும் பூஜ்ஜிய உமிழ்வு நிலையைஅடைவதற்கும்இலங்கை பாடுபட்டு வருகிறது.

வணிக முதலீடுகள் மூலம் உலகளாவிய நிதி வசதிகளை ஈர்க்க நாங்கள் எதிர்பார்க்கிறோம். பெருந்தோட்டத்தொழிலை விவசாய வணிகமாக மாற்றுதல், நிலையான சுற்றுலாவை மேம்படுத்துதல் மற்றும் உற்பத்தித்துறையை மேம்படுத்துதல்மற்றும்டிஜிட்டல்மய மாக்கல் ஆகியவை பிரதான நோக்கங்களாகும். மேலும், தொழில் நுட்பக் கல்வி மற்றும் புத்தாக்கங் களுக்குநான்குபுதியதொழில்நுட்பப் பல்கலைக்கழகங்களைநிறுவுவதற் கானபணிகள்நடைபெற்றுவருகின் றன' என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# திருமலை மாவட்ட பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து தீர்வு தாருங்கள்

## நாடாளுமன்றில் கன்னி உரையாற்றிய குகதாசன்



மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, திருக்கோணமலை மாவட்டத்தில் நிலவுகின்ற மிக முதன்மையான சிக்கல்களை இந்த உயரிய அவையின் கவனத்திற்கு கொண்டுவந்து அவற்றிக்குத் தீர்வு காண விழைகின்றேன் என திருகோணமலை மாவட்ட இலங்கை தமிழ் அரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ச.குகதாசன் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று(செவ்வாய்க்கிழமை)தனது முதலாவது கன்னியுரையின் போதே இவ்வாறு தெரிவித்த அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் -

திருக்கோணேச்சரம் வரலாற்று புகழ்மிக்க ஒரு புனிதத் தலம். இக்கோவிலுக்கு பெருமளவு சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். இவர்கள் இந்த இடத்தின் அழகைக் கண்டுகளிக்க விரும்புகின்றனர். சட்ட விரோதமாகக் கட்டப்பட்ட கடைகள் இதற்குத்தடையாக உள்ளன. மேலும் இக்கடைகளால் கோவிலின் புனிதத் தன்மை கெடுவதோடு இங்கு சில சமூக விரோதச் செயல்பாடுகளும் இடம் பெறுகின்றன. எனவே, இக்கடைகளை வேறு ஒரு தகுந்த இடத்திற்கு மாற்ற வேண்டும் என 2019 மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஒருமனதாக முடிவு எடுக்கப் பட்டது. எனினும் இம்முடிவு இது வரையிலும் செயற்படுத்தப்பட வில்லை. இந்த முடிவை விரைந்து செயற்படுத்த ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவதாக நமது நாட்டின் குடியரசுத் தலைவரும் அரசும் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று மக்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர். எனினும் அரசின் ஓர் அங்கமான வனத் துறை திருக்கோணமலை மாவட்டத்தில் ஏறத்தாழ நாற்பதாயிரம் ஏக்கர் நிலைத்தையும் தொல்பொருள்துறை 2600 ஏக்கர் நிலைத்தையும் கையகப் படுத்தி வைத்துள்ளன.

இந்தக் காணிகள் 1985 ஆம் ஆண்டுக்கு முன்பு மக்கள் பயிர் செய்த நிலங்கள் ஆகும். 1985 ஆம் ஆண்டுக்கு முன்பு மக்கள் பயிர் செய்த நிலங்கள் விடுவிக்கப்படும் என்று குடியரசுத் தலைவர் கூறிய பொழுதும் அது நடைபெறவில்லை. இந்தக் காணிகளை விடுவிக்க அரசு விரைந்து நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

வனத்துறை கையகப்படுத்தி வைத்துள்ள பகுதிக்குள் 80 சிறு குளங்கள் உள்ளன. வனத்துறை இந்த நிலங்களை விடுவித்து இக்குளங்களை திருத்தி அமைப்பதன் மூலம் சில ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தை நெற்செய்கையின் கீழ் கொண்டுவர முடியும். இவற்றின் மூலம் நாட்டின் நெல் உற்பத்தியை பெருக்குவதோடு உழவரது பொருண்மிய நிலையையும் மேம்படுத்தலாம்.

மூன்றாவதாக திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள கடற்றொழிலாளர் எதிர்கொள்ளும் சிக்கல்களை பற்றி தங்கள் கவனத்திற்கு கொண்டுவருகின்றேன். இந்த மாவட்டத்தில் ஏறத்தாழ 23,000 ஆயிரம் குடும்பங்கள் கடற் தொழிலை நம்பி வாழ்கின்றனர் எனினும் நவீன மீன்பிடி முறைமைகள் எதுவும் பின்பற்றப் படுவதில்லை. பன்னாள் மீன்பிடிப் படகு வைத்திருக்கும் மீனவர்கள் மிகக் குறைவாகவே இருக்கின்றனர். பெரும்பாலும் ஓர் எந்திரம் பூட்டிய படகில் சென்று மீன் பிடிப்பவர்களே மிகப் பெரும்பான்மையாக உள்ளனர். இவர்களால் அதிக மீன்களையும் பிடிக்க இயலவில்லை. கடலுக்குச் செல்லும் பொழுது அடிக்கடி காணாமலும் போகின்றனர். அப்படி துன்பப் பட்டு போராடிப் பிடித்த மீன்களுக்கு சரியான விலையும் கிடைப்பதில்லை. பெரும்பாலும் இடைத் தரகர்களே இலாபம் ஈட்டுகின்றனர்.

இதற்கான தீர்வாக ஏழை மீனவர்களுக்கு பன்னாள் மீன்பிடிப் படகு கொள்வனவு செய்வதற்கு மானியத்துடன் கூடிய கடன் கொடுக்கும் திட்டங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

மேலும் பன்னாள் மீன்பிடிப் படகுத் துறைகள் திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள இலங்கைத் துறை முகத்துவாரம், சம்பூர் மற்றும் சல்லி ஆகிய மீன்பிடி கிராமங்களில் நிறுவப்பட வேண்டும். இதனால் மீன் பிடியையும் மீனவர் பொருண்மியத்தையும் கூட்ட இயலும் என்பதோடு கடலில் காணாமற் போவோரின் எண்ணிக்கையும் குறையும். அதுமட்டுமன்றி படகுகள் காணாமற் போகுமிடத்து அப்படகுகளை வானூர்திகள் மூலம் தேடும் நடவடிக்கைகளை அரசு செய்ய வேண்டும்.

திருகோணமலை மாவட்டக் கடற்றொழிலாளர் எதிர்கொள்ளும் மற்றுமொரு சிக்கல் சுருக்குவலையில் மீன் பிடிப்பதாகும் . இதன் காரணமாக கடல் வளம் வரம்பை மீறிச் சுரண்டப்படுவதோடு 100 ஏழை மீனவர் பிடிக்கும் மீன்களை ஒரே ஒரு பெரும் முதலாளியின் சுருக்குவலை படகு பிடிக்கின்றது. சுருக்குவலை சிக்கலுக்குத் தீர்வு ஏட்டப்பட வேண்டுமாயின் சட்டங்கள் கடுமையாக்கப்பட்டு அவற்றை முழுவதுமாக அமுல்படுத்தப்பட வேண்டும்.

நான்காவதாகத் திருக்கோணமலை மாவட்டத்தில் நிலவும் கல்வி தொடர்பான சிக்கல்களைத் தங்கள் மேலான பார்வைக்கு கொண்டு வருகின்றேன் இம் மாவட்டத்தில் 166 தொடக்க கல்வி ஆசிரியர் பற்றாக்குறையும் 116 கணித ஆசிரியர் பற்றாக்குறையும் 53 ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையும் 60 அறிவியல் ஆசிரியர் பற்றாக்குறையும் 52 கணினி ஆசிரியர் பற்றாக்குறையும் 53 தமிழ் ஆசிரியர் பற்றாக்குறையும் ஆக மொத்தம் 500 ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது. இதனால் மாணவர்களது கல்வி மிகவும் பாதிக்கப் படுகிறது. எனவே, ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குவதற்கு போதிய ஆசிரியரை மாவட்டத்திற்கு ஒதுக்கி தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இப்பொழுது உள்ள முறையில் ஆசிரியர் வளப் பங்கீடு சரியான முறையில் அமையவில்லை. மாகாணங்களுக்கு ஆசிரியர் நியமிக்கும் பொழுது பெரும்பாலான ஆசிரியர் திருக்கோணமலை மாவட்டத்திற்கு வருகின்றார்கள். வந்த சில காலங்களில் தத்தம் மாவட்டங்களுக்கு இடமாற்றம் பெற்றுக்கொண்டு சென்று விடுகின்றனர்.

இந்தச் சிக்கலைத் தீர்பதற்குக் கல்வியல் கல்லூரிக்கு அனுமதி வழங்கும் பொழுது பிரதேச செயலாளர் மட்டத்தில் உள்ள வெற்றிடங்களுக்கு அவ்வவ் பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்து தெரிவு செய்தால் இந்தச் சிக்கலைத் தீர்க்கலாம். உள்நாட்டு அமைச்சு கிராம அலுவலர்களை நியமிக்கும் பொழுது பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள வெற்றிடங்களுக்கு அவ்வவ் பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ளவர்களையே நியமிக்கின்றார்கள் இதே முறையை கல்வி அமைச்சும் பின் பற்றினால் ஆசிரியர் பற்றாக்குறைச் சிக்கலுக்கு தீர்வு காணலாம்.

மேலும் கல்வித்துறைக்கு ஒதுக்கப்படும் நிதி போதுமானதாக இல்லை. கல்வித் துறைக்கு 2023 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் 1.3 வீத நிதி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் 1.5 வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதைக் குறைந்தது 5 வீதம் ஆவது உயர்த்தப்பட வேண்டும்.

மேற்கு நாடுகள் தமது வரவு செலவுத் திட்டத்தில் 5 வீதத்துக்கும் கூடுதலான தொகையை கல்விக்கு ஒதுக்குகின்றன என்பதையும் தங்கள் மேலான கவனத்திற்கு கொண்டு வருகின்றேன்.

அடுத்ததாகத் திருக்கோணமலை மாவட்டத்தில் மத்திய அரசாங்கத்தின் மாவட்ட மருத்துவமனையில் 54 மருத்துவர் பற்றாக்குறையும் 9 துறைசார் மருத்துவ நிபுணர் 7 செவிலியர் பற்றாக்குறையும் 3 மருந்தாளர் பற்றாக்குறையும் 39 சுகாதாரப் பணியாளர் பற்றாக்குறையும் 3 சாரதிகள் பற்றாக்குறையும் காணப்படுகின்றன.

மேலும் மாகாண அரசின் கீழ் உள்ள மருத்துவமனைகளில் 40 துறைசார் மருத்துவ நிபுணர் பற்றாக்குறையும் 21 மருத்துவர் பற்றாக்குறையும் 27 செவிலியர் பற்றாக்குறையும் 22 மருந்தாளர் பற்றாக்குறையும் 6 மிகைஒலி ஊடுகதிர் தொழில்நுட்பவியலாளர் பற்றாக்குறையும் 100 சுகாதாரப் பணியாளர் பற்றாக்குறையும் காணப்படுகின்றன. இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆவன செய்யுமாறு உரிய அமைச்சரைக் கேட்டுக் கொள்கின்றேன்.

திருகோணமலை மாவட்ட வைத்தியசாலையில் ஒரு பகுதி கட்டப்பட்ட நிலையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு உள்ளன. இப்பிரிவில் அதிகளவில் நோயாளிகள் சேர்க்கப்படுவதால், நோயாளிகளை நிர்வகிக்க போதிய இடவசதி இல்லாத நிலை உள்ளது. இந்தக் கட்டடத்தை கட்டி முடிக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும் திருக்கோணமலை மாவட்டத்தில் புற்றுநோய் சிகிச்சைக்கான பிரிவு ஒன்று இல்லை. இதனால் இம் மாவட்ட மக்கள் பெரிதும் சிரமத்திற்கு ஆளாகின்றனர். இவர்கள் வெளி மாவட்டங்களுக்கு சிகிச்சைக்காகச் செல்கின்றனர். இதன் விளைவாக இம்மக்கள் பணச் செலவு, போக்குவத்து, நேரம், மொழி, தங்குமிட வசதி முதலிய சிக்கல்கள்களை எதிர்நோக்குகின்றனர். இவற்றை தீர்ப்பதற்கு புற்றுநோய் பிரிவு ஒன்றை இம்மாவட்ட மருத்துவமனையில் நிறுவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்ததாக திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள இளைஞர்கள் விளையாட்டுத் துறையில் முன்னேற முடியாமல் இருப்பதற்கு முக்கிய காரணம் விளையாட்டு அரங்கு இல்லாமல் இருப்பதே ஆகும்.

இம்மாவட்டத்தில் உள்ள முதன்மையான மிகச் சிறந்த பல விளையாட்டு வீரர்களை உருவாக்கிய எம்.சி. கைட்ஸ் விளையாட்டு அரங்கு நீண்ட காலமாக மறுசீரமைக்கப் படாமல் புதர் மண்டிபோய் உள்ளது. இதை மறுசீரமைப்பதன் மூலம் திருக்கோணமலையில் விளையாட்டு துறையில் சாதிக்க எண்ணும் பல நூற்றுக்கணக்கான இளையோர்கள் முன்னேறுவதற்கு ஒரு வாய்ப்பாக அமையும் என்பதோடு பன்னாட்டு விளையாட்டு போட்டிகளை இங்கே நடத்தமுடியும் இதன் வழியாக நாட்டிற்கு அந்நிய நாணய மாற்று வருவாயை கொண்டு வர முடியும்.

அடுத்ததாகத் துறைமுக அதிகார சபையானது, பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பதினொரு கிராம அலுவலர் பிரிவில் உள்ள 5572 ஏக்கர் நிலத்தை கையகப் படுத்தியுள்ளது. இதில் 1868 ஏக்கர் நிலத்தில் 30 ஆண்டுகளுக்கு மேலாக மக்கள் வாழ்கின்றார்கள். துறைமுக அதிகார சபையின் கையகப் படுத்தல் காரணமாக மக்கள் தங்கள் நிலத்தில் எந்தவித செயற்பாடுகளையும் செய்ய இயலாமல் உள்ளது. ஆகவே இவ்விடங்களை அங்கு வாழும் மக்களுக்கு கையளிக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாகத் திருக்கோணமலை மாவட்டத்தில் ஏறத்தாழ 10,000 பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் உள்ளன இவர்கள் போதிய படிப்பறிவு, பட்டறிவு மற்றும் வினைத்திறன் அற்றவர்களாக காணப்படுகின்றனர். ஆகவே இவர்களுக்குத் தேவையான பயிற்சிகளை கொடுத்து கமத்தொழில், கைத் தொழில், கால்நடை வளர்ப்பு, சேவைத் துறை முதலியவற்றில் சுயதொழில் செய்வதற்கு ஆவன செய்யப்பட வேண்டும்.

திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள பல பிரதேச செயலாளர் பிரிவுகளின் எல்லைகள் தெளிவாக இல்லை இதனால் அதிகாரிகளும் பொது மக்களும் பல சிக்கல்களை எதிர்கொள்கிறார்கள். இந்த எல்லைகளை தெளிவு படுத்த ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.


மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நான் இதுவரையில் திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள விவசாயிகள், மீனவர்கள், நோயாளர்கள், மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள், பக்தர்கள், சுற்றுலாப் பயணிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பொது மக்கள் எதிர்நோக்கும் சிக்கல்களை இந்த உயரிய அவையின் கவனத்திற்கு கொண்டு வந்து உள்ளேன். இவற்றைத் தீர்ப்பதற்கு உரிய அமைச்சர்கள் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுகொள்கிறேன்.

- என நாடாளுமன்றத்தில் தனது முதலாவது உரையில் தெரிவித்தார். (05)

# தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களை வென்று தேசிய மட்டத்திற்கு கல்முனை ஸாஹிறா தெரிவு







(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

இலங்கை பாடசாலை மெய்வல்லுனர் சங்கத்தால் ரிட்ச்பரி நிறுவனத்தின் அனுசரணையில் நாடுபூராக நடைபெறும் 53 ஆவது சேர் ஜோன் ராபர்ட் கனிஷ்ட மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் விளையாட்டு போட்டியில், கல்முனை ஸாஹிறா தேசிய பாடசாலையைச் சேர்ந்த மாணவன் எம்.ஆர்.எம். பதாஹீ பாதிக் 14 வயதுப் பிரிவு ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப்போட்டியில் முதலாம் இடத்தைப்பெற்று தங்கப்பதக்கத்தையும் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தைப்பெற்று வெள்ளிப் பதக்கத்தையும் வென்று தேசிய மட்ட போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாணம் மற்றும் பொலன்னறுவை மாவட்டத்தை மையமாகக் கொண்டு நடத்தப்பட்ட ஆரம்ப சுற்றுப் போட்டிகள் மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் இடம்பெற்றன.

இச்சாதனை நிலை நாட்ட ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கி ஊக்கப்படுத்திய கல்லூரி அதிபர் எம்.ஐ. ஜாபிர், இணைப்பாட விதான செயற்பாடுகளுக்குப் பொறுப்பான பிரதி அதிபர் ஏ.எல்.எம். தன்சீல் மற்றும் மாணவனைப் பயிற்றுவித்த உடற் கல்வி ஆசிரியர் ஏ.எம். அப்றாஜ் றிழா மற்றும் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர், இப்போட்டியில் பங்குபற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய பெற்றோர், போட்டிக்காக அழைத்துச் சென்ற பாதுகாவலர் மற்றும் போட்டிகளில் பங்கேற்று தமது உச்ச திறமைகளை வெளிக்காட்டிய மாணவனுக்கும் பாடசாலை சமூகத்தினர் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வாய்ப்பும் வழியும்

மாகாணசபைகள்தேர்தல்சட்டத்திருத்தப்பிரேரணைநாடாளுமன்றத்தில் நேற்று அதன் இரண்டாம் வாசிப்பு மீது வாக்கெடுப்போ விவாதமோ இன்றி நிறைவேறியுள்ளது. அதாவது கிட்டத்தட்ட ஏகமனதாக அது நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதுதான் அதன் பொருள். நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து உரையாற்ற முற்பட்டார் எனினும் அது பெரிதாகக் கண்டுகொள்ளப்படவில்லை. ஒரு சில நிமிடங்களில் சட்ட (திருத்த) மூலம் நிறைவேற்றப்பட்டு நாடாளுமன்றம் அடுத்த நிகழ்ச்சி நிரலுக்கு நகர்ந்தது.

இரண்டாம் வாசிப்பில் நிறைவேற்றப்பட்ட இந்தச் சட்டமூலம் இனி சட்டங்களுக்கான நிலையியற் குழுவிற்கு அனுப்பப்படுகின்றது. அங்கு இந்தச் சட்டமூலம் தொடர்பில் உயர் நீதிமன்றம் ஏற்கனவே வழங்கிய திருத்தங்கள்சட்டமூலத்திற்குள்உள்வாங்கப்படும். உயர்நீதிமன்றசிபாரிசுகள் அனைத்தும் ஏற்கப்பட்டு திருத்தி வரும் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் மூன்றாம் வாசிப்பில் சபையில் மீண்டும் நிறைவேற்றப்படும். உறுப்பினர்கள் யாராவது வாக்கெடுப்புக் கோரினால் மட்டும் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு அது நிறைவேற்றப்படும் அல்லது தோற்கடிக்கப்படும்.

தற்போதிருக்கின்ற நிலையில் மூன்றாம் வாசிப்பின் போதும் பெரும் சிக்கல்கள் எவையும் தோன்றுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்றே தெரிகின்றது. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவு மூலம் அல்லது 2ஆம் வாசிப்புப் போன்றே விவாதமோ வாக்கெடுப்போ இன்றியே அதுவும் நிறைவேறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம்.

இந்த நிலை ஏற்படுவதற்கு அரசுத் தலைவர் தேர்தல் ஒரு மிக முக்கிய காரணம். அது மட்டுமன்றி அந்தத் தேர்தலையொட்டி அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவோம் என்று எதிர்க் கட்சிகளும் தேர்தலில் முதன்மைக் கட்சிகளாகவும் இருக்கும் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஜேவிபி ஆகியன வழங்கியிருந்த வாக்குறுதிச் சூழலும் மிகப் பெரிய காரணம். அவர்கள் ஏற்கனவே இவ்வாறான வாக்குறுதிகளை வழங்கியிருப்பதால் மாகாண சபைகளை மீண்டும் இயங்குநிலைக்குக் கொண்டுவரும் இத்தகைய சட்டமூலத்தை எதிர்க்கமுடியாத நிலையில் உள்ளனர். அப்படிச் செய்தால் தமிழ் மக்கள் முன் அம்பலப்பட்டு வாக்குகளை இழக்கவேண்டி ஏற்படும் என்பதால் அது குறித்து அவர்கள் சிந்திக்கக்கூட மாட்டார்கள் இப்போதைக்கு.

ஆளும் தரப்புப் பக்கத்தில் இப்போதைக்கு பொது ஜன பெரமுனவின் பக்கம் இருந்து அரசுத் தலைவர் பக்கம் சாய்ந்திருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரணில் விக்கிரமசிங்கவின் ஆணைகளை எதிர்க்கும் திறனற்றவர்கள். அப்படிச் செய்தால் ரணிலின் வெற்றி வாய்ப்பைப் பாதிப்பது மட்டுமன்றி தாமும் நடுத்தெருவில் நிற்கவேண்டிய நிலை ஏற்படும் என்பது அவர்களுக்கும் தெரியும். எனவே காலச் சூழல் காரணமாக இந்தச் சட்டமூலம் நிறைவேறுவதற்கான வாய்ப்பைப் பெற்றுள்ளது.

சுமந்திரன் இந்தக் சட்ட(திருத்த)மூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து பல ஆண்டுகளாகிவிட்டன. நல்லாட்சி எனப்பட்ட மைத்திரி – ரணில் கூட்டு அதிகாரத்தில் இருந்தபோது கொண்டுவரப்பட்டது இந்தத் திருத்தம். ஆனால் அது நிறைவேற்றப்படவில்லை. காரணம் அப்போதைய ஆளும் தரப்பு அதற்கு ஆதரவாக இருக்கவில்லை. அதன் பின்னர் அரசுத் தலைவர் கோட்டாபய ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் அதுபற்றிய கரிசனையே இருந்ததில்லை. தற்போது மூன்றாவது முறையாக இந்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படும் சூழல் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அதற்கான ஒரே காரணம் அரசுத் தலைவர் தேர்தல்தான்.

இந்தத் தருணத்தை வாய்ப்பை, ரணில் விக்கிரமசிங்கவின் கையறு நிலையை நன்கு பயன்படுத்திக்கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் காய்களை நகர்த்தியதன் மூலம் அவரால் தனது முயற்சியில் முக்கால்வாசிக் கிணற்றைத் தாண்ட முடிந்திருக்கின்றது. இனி அது முழு வெற்றியைப் பெறவேண்டும். இந்த இரண்டாம் வாசிப்பு நிறைவேற்றப்பட்ட விதத்தைப் பார்க்கும்போது இந்தச் சிறு விடயத்துக்காகத்தானா இத்தனை வருடகாலத் தாமதம் என்ற எண்ணமே மேலோங்குகின்றது. அரசுத் தலைவராக ரணில் பதவியேற்ற கடந்த 2 வருட காலத்தில்கூட இந்தச் சட்டமூலத்தை நிறைவேற்ற அவர் ஆதரவாக இருந்ததில்லை. ஆளும் தரப்பினர் ஆதரவில்லை என்பதை ஒரு சாட்டாக முன்வைத்தார். இப்போது தமிழ் மக்களின் வாக்குகளின் தேவை அவரை கிழிறங்கி வர வைத்திருக்கிறது. நீண்ட காலத்தின் பின்னர் தமிழ் அரசியல் ஒரு வாய்ப்பை சரியாகப் பயன்படுத்திக்கொண்ட சந்தர்ப்பமாக இதைக் குறித்துக்கொள்ளலாம்.

இந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால், அதன் பின்னர் காணி அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்கக்கூடிய காணி ஆணைக்குழுவிற்கான சட்டத்தையும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றவேண்டியிருக்கும். பொலிஸ் அதிகாரத்திற்காகவும் அப்படி ஒரு சட்டம் நிறைவேற்றப்படவேண்டும்தான். ஆனால் ரணில் அதற்குத் தயாராக இல்லாத நிலையில் குறைந்தபட்சம் காணி ஆணைக்குழுவையாவது நியமிக்க அவர் முன்வருவார் என்று எதிர்பார்க்கலாம். தமிழர் தரப்பு கனகச்சிதமாகக் காய்களை நகர்த்தி காணி அதிகாரங்களையும் பெற்றுக்கொண்டால், கொழும்பு அரசு காணிகளை அபகரிப்பதை வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகள் மூலம் கட்டுப்படுத்துவதற்கு ஒரு வழி ஏற்பட்டுவிடும்.

அவர்கள்தேர்தலி–ல்கவனம்செலுத்தவாய்ப்பைப்பயன்படுத்திக்கொண்டு அவர்களிடமிருந்த அதிகாரங்களைப் பிடுங்கிக்கொள்வதில் தமிழர் தரப்பும் கருத்தோடு செயற்பட்டால், ஒரு சில இடைக்கால நிவாரணங்களாவது தமிழர்களுக்குக் கிடைக்கக்கூடும்.

# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்; எல்லை மீறும் பரப்புரை






தமிழ் அரசியல் கட்சிகளிடையேயான சண்டையைவிட மோசமான போக்கில் சென்றுகொண்டிருக்கிறது அமெரிக்காவில் அதிபர் தேர்தல் பரப்புரை. இங்கேதான் பேசிப்பேசி சொற்களால் ஊரை மணக்கச் செய்வார்கள் என்றால் அமெரிக்காவிலும் பேசிப் பேசி உலகத்தையே மணக்கச் செய்துகொண்டிருக்கிறார்கள்.

ஜனநாயகக்கட்சியின்சார்பில்தற்போதையஅதிபர் ஜோ பைடனும் குடியரசுக் கட்சி சார்பில் முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப்பும்தான் வேட்பாளர்கள் என்று உறுதியானதுமே சகட்டுமேனிக்கு ஒருவரை ஒருவர் குறைகூறிக் கொண்டிருந்தார்கள்.

ஜோ பைடனுடைய வயதும், அவ்வப்போது தலைகாட்டும் அவருடைய மறதியும் பேச்சுக் குழறலும் டிரம்ப்புக்கு மிகவும் வசதியாக இருந்தது. உள்ளபடியே சொல்லப் போனால் இருவருமே வயதானவர்கள்தான். என்ன, பைடனுக்கு 3 வயது அதிகம், 81. டிரம்புக்கு 78, அவ்வளவுதான். ஆனால், பைடன் கொஞ்சம் அவ்வப்போது தடுமாறுவார்.

இதைச் சொல்லியே ஜெயித்துவிடலாம் என டிரம்ப் நினைத்துக் கொண்டிருந்திருப்பார் போல. அவர் நினைத்ததைப் போல ஒரு வாய்ப்பும் வந்தது. நல்லதற்கா, கெட்டதற்கா எனத் தெரியவில்லை. வழக்கத்துக்கு மாறாக பைடனே அழைப்பு விடுக்க, இரு வேட்பாளர்களுக்கும் இடையே நடந்த நேருக்கு நேர் விவாதத்தில் ரொம்பவுமே சொதப்பிவிட்டார் ஜோ பைடன் (இதேபோல, நம்ம நாட்டிலேயும் ஒரு நேருக்கு நேர் விவாதத்திற்குச் சவால் விடுக்கப்பட்டுள்ளது. ஆனால் நடப்பதாகத் தெரியவில்லை. நடந்தால் நன்றாகத்தான் இருக்கும்). இத்தனைக்கும் இந்த விவாதத்தில் டிரம்ப் குறிப்பிட்டவற்றில் அல்லது அள்ளிவிட்டவற்றில் பல விஷயங்கள் டுமீல்கள்தான் என்று பிறகு தரவுச் சரி பார்க்கைகள் வழி எல்லாரும் கழுவி ஊற்றிக்கொண்டிருந்தார்கள். ஆனாலும், கடைசியில் விவாதமே விவாதப் பொருளாகி ஜனநாயகக் கட்சிக்காரர்களே ஜோ பைடனைக் கழற்றிவிட்டுவிட வேண்டியதுதான், இல்லாவிட்டால் கதை கந்தலாகிவிடும் என்று அஞ்சத் தொடங்கிய நிலைக்கு இட்டுச் சென்றது. மட்டுமின்றி அடுத்து ஆக வேண்டிய வேலையையும் பார்க்கத் தொடங்கிவிட்டனர்.

ஜோ பைடன்




பரவாயில்லை, இப்போதேனும் நாம் வேட்பாளரை மாற்றிவிடுவோம். இல்லாவிட்டால் இவற்றையே சொல்லி எளிதாக டிரம்ப் வெற்றி பெற்றுவிடுவார் எனத் திட்டமிட, யாருடைய நல்ல நேரமோ, பைடனுக்கு கரோனா தொற்றுக் காய்ச்சல் வந்தது. அவருடைய வீட்டிலும் வேண்டாம், மதிப்பாகவே விலகிவிடலாம் என்றிருப்பார்கள் போல. வீம்புக்காகப் போட்டி போட வேண்டாம் என்று நினைத்த அதிபர் ஜோ பைடனும் திடீரென இந்தத் தேர்தலில் தாம் போட்டியிடாமல் விலகிக் கொள்வதாக அறிவித்துவிட்டார். கூடவே, அதிபர் வேட்பாளருக்குத் தம்முடைய தெரிவு, தற்போது துணை அதிபராக இருக்கும் கமலா ஹாரிஸ்தான் என்றும் அறிவித்தார்.

டொனால்ட் டிரம்ப் இதை எதிர்பார்த்திருக்க மாட்டார் போல. கமலா ஹாரிஸை அதிபர் வேட்பாளராக ஜனநாயகக் கட்சி ஏற்காது என்றொரு நினைப்பு இருந்தது. அதற்கேற்றாற் போல தொடக்கத்தில் கமலா ஹாரிஸுக்கும் டிரம்ப்புக்குமான ஆதரவில் கொஞ்சம்தான் வேறுபாடு இருந்தது. ஆனால், எல்லா தடங்கல்களையும் தாண்டி பைடன் சொன்னபடியே கமலாதான் வேட்பாளர் என்பதில் ஜனநாயகக் கட்சியினர் இப்போது திடமாகிவிட்டனர்.

டிரம்ப்பைவிட கமலாவுக்கு ஆதரவு பெருகத் தொடங்கியிருக்கிறது. இருக்கிற ஆதரவுடன் கறுப்பின மக்களின் ஆதரவும் சேர எளிதில் கமலா வெற்றி பெற்றுவிடுவார் என்கிற மாதிரி நிலைமை மாற, பார்த்தார் டிரம்ப். இதென்னடா, புதுக் கழுதையாக (ஜனநாயகக் கட்சியின் சின்னம், அவ்வளவுதான்!) இருக்கிறதே என்று ஹாரிஸை நோக்கி ஸ்ட்ரெய்ட்டாக பந்து வீசத் தொடங்கிவிட்டார்.

உலகத்தின் டாப் வல்லரசுக்கு அதிபராகப் போகிறவர்கள் பேசுகிற பேச்சு மாதிரி இல்லை, இவர்கள் பேசிக் கொண்டிருப்பது, இல்லை, மேடையில் உரையாற்றிக் கொண்டிருப்பது. நம் நாட்டில் தேர்தல் நேரத்தில் லோகல் பேச்சாளர்கள், இவர் அந்த ஒட்டுக்குழு, அவர் இந்தத் துரோகி என்று சகட்டுமேனிக்குப் பேசுவது போல தரை லெவலுக்கு இறங்கி டொனால்ட் டிரம்ப், கமலாவின் இனத்தைச் சுட்டிக்காட்டிப் பேச ஆரம்பித்துவிட்டார்.

டொனால்ட் டிரம்ப்



சிகாகோவில் கறுப்பின பத்திரிகையாளர்கள் இடையே பேசிய டிரம்ப், ‘ரொம்ப காலமாக எனக்கு அவரைத் தெரியும். மறைமுகமாக. நேரடியாக என்று சொல்ல முடியாது. அவர் எப்போதுமே இந்திய பாரம்பரியத்துக்காரர்தான். இந்திய பாரம்பரியத்தைத்தான் ஊக்குவிப்பார்.

தொடர்ச்சி 5ம் பக்கம்..........

# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்; எல்லை மீறும் பரப்புரை

அவர் கறுப்பராக மாற நேர்ந்த சில ஆண்டுகளுக்கு முன்பு வரையிலும் எனக்கு அவர் கறுப்பர் என்றே தெரியாது. ஆனால், இப்போ அவர் கறுப்பராக அறியப்படவேண்டும் என்று நினைக்கிறார். ஆக, எனக்குத் தெரியவில்லை, அவர் இந்தியரா அல்லது கறுப்பரா?

'இவர்களில் யாராக இருந்தாலும் மதிக்கிறேன். ஆனால், அவர் அப்படியல்ல. ஏனெனில், அவர் எப்போதுமே இந்தியர்தான். திடீரென்று ஒரு நாள் அவர் கறுப்பராக மாறிவிட்டார்' என்று விசமாகக் கக்கித் தள்ளிவிட்டார்.

கமலாவுடைய அம்மா தென் இந்தியாக்காரர் (தஞ்சை டெல்டாவிலிருந்து சென்னை வந்தவர்கள், அப்படியே பிறகு அமெரிக்கா போனவர்), அப்பா ஜமைக்கா நாட்டைச் சேர்ந்தவர். இரு பாரம்பரியங்களின் மீது பற்றுக்கொண்டிருந்தாலும் சின்ன வயதிலிருந்தே எப்போதும் கறுப்பராகவே கமலா தன்னை அடையாளப்படுத்தி வந்திருக்கிறார். காலங்காலமாகக் கறுப்பர்களுக்கானதாகக் கருதப்படும் ஹோவர்ட் பல்கலைக்கழகத்தில்தான் அவர் படித்தார். தமிழ்நாட்டுக்கும் வருவார், ஜமைக்காவுக்கும் செல்வார்

டிரம்ப் கொளுத்திப் போட்டதுமே அவருடைய சமூக ஊடகக் குழுக்கள் எல்லாமும் வரிந்துகட்டிக்கொண்டு, கமலா ஹாரிஸ் இந்தியர்தான், கறுப்பர் அல்ல என்று சித்திரிக்கும்படியாக அவருடைய பழைய படங்களை எல்லாம் பரப்பத் தொடங்கிவிட்டனர். போலியானவர், சந்தர்ப்பவாதி என்றெல்லாமும் தூற்றுகின்றனர்.

மனைவி உஷா வேன்ஸுடன் ஜே.டி. வேன்ஸ்

டொனால்ட் டிரம்ப்புடன் இணைந்து குடியரசுக் கட்சி சார்பில் துணை அதிபர் பதவிக்குப் போட்டியிடும் ஜே.டி. வேன்ஸோ, கமலா ஹாரிஸ் மிகவும் போலியானவர், கனடாவில் வளர்ந்தவர் என்றெல்லாமும் தாக்கத் தொடங்கிவிட்டார். என்ன கொடுமை என்றால், அமெரிக்கரான இவருடைய மனைவி உஷா வேன்ஸும்கூட இந்தியாவை (ஆந்திரத்தை) பூர்விகமாகக் கொண்டவர் தான். சற்று உழைக்கிறவர்களுக்கு சார்பானவராக அறியப்படும் இவரை, சில மாகாணங்களில் முன்னிறுத்துவதன் மூலம் தனக்கு ஆதரவாக வாக்குகளைப் பெற முடியும் என்பதால் டொனால்ட் டிரம்ப் தேர்ந்தெடுத்தர் என்று கூறுகிறார்கள்.

## கமலா ஹாரிஸ்

அமெரிக்க முன்னாள் அதிபர்களில் ஒருவரும் கறுப்பினத்தைச் சேர்ந்த முதல் அதிபருமான பராக் ஒபாமாவின் அப்பாகூட கென்யாக்காரர்தான். அம்மாதான் அமெரிக்க வெள்ளையினத்தவர். அமெரிக்காவில் இந்தக் காலத்தில் இப்படியெல்லாம் இனத்தை முன்வைத்துப் பேசுவதெல்லாம்



எவ்வளவு அபத்தம் என்று இவர்களுக்கெல்லாம் தெரியாமலா இருக்கும்? என்ன செய்ய அரசியல், அதுவும் அதிபர் பதவிக்கு, எப்படியாவது வெற்றி பெற வேண்டும் அல்லவா?

கமலா ஹாரிஸையும் பெண் என்பதற்காக எகத்தாளமாகப் பேசுகிறார், எப்போதுமே பெண்கள் என்றால் தாழ்வாகவே கருதுகின்றவர் டிரம்ப். அவர் (கமலா) ஒரு விளையாட்டு பொம்மை, அவர் அதிபரானால் உலகத் தலைவர்கள் எல்லாம் அவரைப் பார்ப்பார்கள், அப்படியே கடந்துபோய்விடுவார்கள். அவர் விளையாட்டுப் பொம்மையைப் போலதான் இருப்பார் என்றும் நக்கலடித்திருக்கிறார்.

கமலா ஹாரிஸ் என்னவோ பதற்றமடையாமல் மிகவும் நிதானமாகவே தேர்தலை அணுகுகிறார் போலத் தெரிகிறது. டிரம்ப்பினுடைய 'புகழ்பெற்ற' பேச்சுகளையே அவருக்கு எதிராகத் திருப்பிவிடுகிறார். அட்லான்டாவில் ஒரு பரப்புரைக் கூட்டத்தில் பேசும்போது, உங்களுக்கு ஏதாவது சொல்லவேண்டும் என்று நினைத்தால் என் முகத்துக்கு முன் நின்று சொல்லுங்கள் என்று ஒரு விவாதத்துக்கும் சவால் விடுத்திருக்கிறார். கமலாவுக்கு 59 வயது! இப்போது களத்தில் டிரம்ப்தான் ஓல்ட் மேன், கமலாவைவிட கிட்டத்தட்ட 20 வயது அதிகம்.

கமலாவுடைய நிதானம்தான் இப்போது டிரம்ப்பை ரொம்பவுமே தூண்டிவிட்டிருப்பதாகத் தோன்றுகிறது. கறுப்பர்களுக்கு ஒருக்காலும் உதவக் கூடியவர் அல்லர் என்றாலும் கறுப்பர்கள் வாக்குகளைக் கைப்பற்றுவதற்காகக் குழைந்துகொண்டிருக்கும் டிரம்ப்பும் டிரம்ப் ஆதரவாளர்களும், எப்படியாவது கமலா ஹாரிஸ் கறுப்பர் அல்ல, இந்தியர் என்று மக்களை நம்பவைத்துவிட வேண்டும் என்று (ஆளைப் பார்த்தாலே தெரிகிறதே? பிறகு எப்படி மாற்றுவது?) படாதபாடு பட்டுக்கொண்டிருக்கின்றனர். ஏனென்றால் கறுப்பர் வாக்குகள் போய்விடுமாம்.

## அந்தக் கால குடும்பப் படம்

கமலா ஹாரிஸ் தன்னுடைய அம்மா ஊரான சென்னைக்கு வந்திருந்தபோது, சேலை கட்டி, தாத்தா, பாட்டி, குடும்பத்துடன் எடுத்துக்கொண்ட ஒரு பழைய படத்தை டொனால்ட் டிரம்ப் திடீரென்று சமூக ஊடகங்களில் வெளியிட்டு, பல ஆண்டுகளுக்கு முன்பு நீங்கள் அனுப்பிய இந்த நல்ல படத்துக்கு நன்றி கமலா. இந்திய பாரம்பரியத்தின் மீது நீங்கள் கொண்டிருக்கிற நட்பும் அன்பும் பாராட்டத்தக்கது என்று குறிப்பிட்டிருக்கிறார். கலாய்க்கிறாராம்! உடனே, டிரம்ப் காட்டிய வழியில் கமலா இஸ் இந்தியன், ஃபேக்பிளாக் என்றெல்லாம் ஹேஷ்டேக் போட்டுக்கொண்டிருக்கிறார்கள் அவருடைய ஆதரவாளர்கள்.

இதற்கு நடுவே டிரம்ப்பின் தீவிர ஆதரவாளரும் நன்கொடையாளருமான எக்ஸ் தள அதிபர் எலான் மஸ்க்கோ, தன்னறிவுடன் செய்யறிவையும் பயன்படுத்தி, கமலாவின் குரலை மாற்றிப் பதிந்து பதிவேற்றியதில் ஒரே களேபரம்.



அதிபர் தேர்தலுக்கு இன்னமும் முழுதாக மூன்று மாதங்கள் இருக்கின்றன. நவம்பர் 5 தான் வாக்குப் பதிவு. இன்னும் என்னென்ன கூத்தெல்லாம் அங்கே காட்டப் போகிறார்களோ? பார்க்கப் போகிறோமோ? கதைக்கு ஆகாது என்றாலும் அதுவரைக்கும் நல்ல பொழுதுபோக்காக டொனால்ட் டிரம்ப் இருப்பார் என நம்பலாம்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# சம்மாந்துறையில் மர்மமான முறையில் உயிரிழந்த யானை

## தொடரும் விசாரணைகள்

(தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை பொலிஸ்பிரிவிற்குட்பட்ட மல்வத்தை சின்ன கொக்கநாரை வயல் பகுதியில் மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில் யானையின் சடலம் ஒன்று காணப்பட்டுள்ளது.

சம்மாந்துறை மல்வத்தை சின்ன கொக்கநாரை பகுதியில் செவ்வாய்க்கிழமை அதிகாலை யானையின் சடலம் இருப்பதை விவசாயிகள்அவதானித்து பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதைய டுத்தே குறித்த யானையின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.



யானையின் இறப்புக்கான காரணம் என்ன என்பது தொடர்பில் இதுவரை எவ்வித தகவல்களும் வெளியாகவில்லை.



அதேவேளை, அப்பகுதியில் மர்மமான யானையின் இறப்பு தொடர்பில், வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பொலிஸார் இணைந்து விரிவான விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அத்துடன், வனஜீவராசிகள் திணைக்களத்தினர், குறித்த யானை யின் மரணம் தொடர்பான காரணத்தை மருத்துவ பரிசோதனையின் பின்னரே அறிய முடியும் என தெரிவித்துள்ளனர். (05)

# திருமலை மாவட்ட சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதியை சந்தித்து பேசவில்லையாம்

## சிலர் தனிப்படவே சந்தித்துள்ளனர் என்கிறார் அதன் தலைவர் சபறுள்ளா



கடந்த 4 ஆம் திகதி திருகோணமலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களை சட்டத்தரணிகள் சங்கம் சந்தித்து ஜனாதிபதி தேர்தலில் ஆதரவு தெரிவித்ததாக கூறப்படும் செய்தி உண்மைக்கு புறம்பானது என திருகோணமலை மாவட்ட சட்டத்தரணிகள் சங்க தலைவர் எம். சீ. சபறுள்ளா தெரிவித்தார்.

திருகோணமலை நீதிமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று (செவ்வாய்க்கிழமை)காலை இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் -

இம்மாதம் ஒகஸ்ட் 5 ஆம் திகதிய தேசிய பத்திரிகை ஒன்றில் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு என வெளியான செய்தி உண்மைக்கு புறம்பான செய்தியாகும். இந்த செய்தியை வெளியிட்ட அதே நிறுவனம் எங்களது மறுப்பறிக்கையை அதே முன் பக்கத்தில் வெளியிட வேண்டும். தனிப்பட்ட அரசியல் அபிலாஷைகளுக்காக சில சட்டத்தரணிகள் கடந்த ஞாயிறு ஜனாதிபதியை சந்தித்தனர். நடக்காதது நடந்தது என கூறுவது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஜனாதிபதியால் சட்டத்தரணிகள் சங்கத்துக்கு எந்தவித அழைப்பும் கிடைக்கவில்லை. இது மக்களை பிழையாகவழிநடத்துகின்ற செய்தியாகும். இது தவிரவேறுஒளிஒலிஊடகங்களிலும்உண்மைக்கு புறம்பான செய்தி வெளியிட்டுள்ளது.

எனவேஇதனைகைவாங்கிமறுப்பு தெரிவிக்க வேண்டும். சட்டரீதியான நடவடிக்கைக்காக கோரிக்கை கடிதம் அனுப்ப தயார் நிலையில் உள்ளோம். - என்றார். (05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

# ஊழல் ஒழிப்பு திட்டத்தை முன்னிட்டு கிளிநொச்சியில் கலந்துரையாடல்



இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சரத்துக்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு 2025-2029 ஆம் ஆண்டுக்கான தேசிய ஊழல் ஒழிப்பு திட்டத்தை விருந்தகத்தில் நடை பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் மாவட்ட அரசாங்கதிபர் எஸ்- முரளீதரன் கலந்து கொண்டார்.

மேற்படி கலந்துரையாடலில்




தயாரிப்பதற்கான பல்வேறு தரப்பினரின் கருத்துக்களை உள்வாங்கும் வடமாகாணத்திற்கான கலந்துரையாடல் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சரத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் கிளிநொச்சியிலுள்ள தனியார் மதகுருமார்கள், திணைக் கள தலைவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், சுகாதார துறைசார்ந்தவர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் உறுப்பினர்கள் ஊடகவியலாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (05 - 113)

# இந்திய மீனவர்கள் 22 பேர் கற்பிட்டிக் கடலில் கைது

(எம் சியாஜ்)

இந்தியா தூத்துக்குடி மீன்பிடி துறைமுகத்தில் இருந்து மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட 22 மீனவர்கள் இரண்டு விசைப்படகுகளுடன் திங்கட்கிழமை இரவு கற்பிட்டி வடக்கு கடல் பகுதியில் வைத்து எல்லை தாண்டி மீன்பிடித்ததாக அப்பகுதியில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த கடற்படையினரால் கைது செய்து கற்பிட்டி விஜய கடற்படை முகாமிற்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்களிடம் முதற்கட்ட விசாரணை செய்த பின்னர் நேற்று நண்பகல் மீனவர்கள் 22 பேரையும் புத்தளம் கடற்தொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்ததாக கடற்படையினர் தெரிவித்தனர்.(05)

# ஓய்வு நிலை சாதனையாளர்களுக்கு நற்பிட்டிமுனையில் பாராட்டு விழா





(பாறுக் ஷிஹான்)




நற்பிட்டிமுனை அல்-கரீம் பவுண்டேஷனின் பணிப்பாளர் சீ. எம். ஹலீம் தலைமையில் 'ஓய்வு நிலை சாதனையாளர்கள் பாராட்டு நிகழ்வு' ஞாயிற்றுக்கிழமை சவளக்கடை றோயல் கார்டனில் இடம் பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட இளைஞர் அமைப்பாளரும், மயோன் கல்வித்திட்ட மற்றும் சமூக அமைப்பின் தலைவருமான றிஸ்லி முஸ்தபா கலந்து கொண்டார்.

அதிதிகள் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டனர்.பின்னர் கிராஅத், வரவேற்புரை ,வரவேற்பு கீதம், பிரதம அதிதியால் பள்ளிவாசலுக்கு மின் குமிழ் கையளிக்கப்பட்ட நிகழ்வு நடைபெற்றது.

இதன் போது நற்பிட்டிமுனை பிரதேசத்தில் உள்ள ஓய்வு நிலை சாதனையாளர்களுக்கு கௌரவமும் வழங்கி வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் கௌரவ அதிதியாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் கல்முனைத் தொகுதியின் அமைப்பாளரும் முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினருமான சீ. எம். முபீத் மற்றும் அல் - கரீம் பவுண்டேஷனின் உறுப்பினர்களும் இன்னும் பல அதிதிகளும் கலந்து சிறப்பித்தனர்.(05)



## ஆசிரியர் ஒருவரின் சடலம் வவுனியா கிணற்றில் மீட்பு



வவுனியா, நெளுக்குளம், பாலாமைக்கல் பகுதியில் உள்ள தோட்டக்காணி கிணற்றில் இருந்து ஆசிரியர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.



வீதியால்சென்றவர்கள்வழங்கிய தகவலுக்கு அமைய நேற்று காலை குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

வவுனியா, வேப்பங்குளம் 60 ஏக்கர்பகுதியைவசிக்கும்வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் தகவல் தொழில்நுட்பம் கற்பிக்கும் ஆசிரியரான கிருஷன் என்ற இளைஞரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சடலம் மீட்கப்பட்ட கிணற்றுக்கு



அருகில் குறித்த ஆசிரியரின் சைக்கிள், பாதணி, குடை என்பனவும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நெளுக்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05-100)

## மாணவர் சந்தை நிகழ்ச்சி திட்டம்





(எம்.எப்.றிபாஸ்)

கலைத்திட்டத்திகமைய செயற்படுத்தப்பட்பட்டு வரும் மாணவர் சந்தை நிகழ்ச்சி அட்டாளச்சேனை அல் முனீரா பெண்கள் உயர்பாடசாலையில் நடைபெற்றது.

ஆரம்பப் பிரிவு வளையத் தலைவர் எம்.ஐ.ஜெளபரின் நெறிப்படுத்தலின் கீழ் அதிபர் ஏ. சீ.நியாஸ் தலைமையில் தரம் மூன்று மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் பாடசாலையின் பிரதி அதிபர்களான எம்.ரீ.எம். சியாத், ஏ.கே. அனீஸ், எம். ஏ. சுஹைறா, ஏ.ஜே.றினீஸ், ஆகியோர் விசேட அதிதிகளாக கலந்து கொண்டனர்.

தரம் மூன்று மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள், மணவர்கள் என பலரும் கலந்து கொண்டு மாணவர் சந்தையில் வைக்கப்பட்டுள்ள பொருள்களைப் பார்வையிட்டனர். (05)




காலைக்கதிர் Kalaikkathir

# விருப்பு வாக்கை இன்னொருவருக்கும் அளியுங்கள் என நான் கூறமாட்டேன்

## சி.வி.விக்கினேஸ்வரன் இப்படிக் கருத்து

தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் சமூகங்கள் ஜனாதிபதித ;தேர்தலில் நிறுத்தும்போது ஒட்டுமொத்த தமிழ் மக்களும் அந்த வேட்பாளருக்கே தமது வாக்குகளை அளிக்கவேண்டும். விருப்பு வாக்கை எவ்வாறு பயன்படுத்துவது என்பது தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைக்கு உட்பட்ட விடயமாகும். அந்த வாக்கை இன்னாருக்கு அளியுங்கள் என்று நான் ஒருபோதும் கூறமாட்டேன் என தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் 2 ஆம், 3 ஆம் விருப்பு வாக்குகளை யாருக்கு அளிக்கவேண்டும் என்பது குறித்துத் தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி வெளியிட்டிருக்கும் அறிக்கையிலேயே விக்கினேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அந்த அறிக்கையில் மேலும் கூறியிருப்பவை வருமாறு -

தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் சமூகங்கள் ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தும்போது ஒட்டுமொத்த தமிழ் மக்களும் அந்த வேட்பாளருக்கே தமது வாக்குகளை அளிக்கவேண்டும். விருப்பு வாக்கை எவ்வாறு பயன்படுத்துவது என்பது தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைக்கு உட்பட்ட விடயமாகும். இது தொடர்பாக அவர்கள்தான் தீர்மானிக்கவேண்டும்.

இந்த வேட்பாளருக்குத்தான் தமிழ் மக்கள் தமது விருப்பு வாக்கை அளிக்கவேண்டும் என்று நான் எந்தவொரு கோரிக்கையையோ அல்லது ஆலோசனையையோ முன்வைக்கவில்லை. ஊடகவியலாளர்களால் பல கேள்விகள் முன்வைக்கப்படும்போது, எமது அடிப்படைக் குறிக்கோள்களை நாங்கள் சிதைத்திருப்பதாக எனது பதில்களைத் திரித்து வெளியிடும் பழக்கம் சில ஊடகவியலாளர்களுக்கு இருப்பதைக் காணமுடிகின்றது.

ஆனால் அவை என்னுடைய கருத்துக்களன்று. நான் சில காலத்துக்கு முன்னர் தேர்தலைப் பிற்போட்டால் நாட்டுக்கு நன்மை பயக்கும் என்று கூறியமை உண்மைதான். இப்போதும் இந்த ஜனாதிபதித் தேர்தலால் ஏற்படக்கூடிய பின்விளைவுகள் குறித்து நான் அஞ்சுகிறேன். எந்தவொரு சிங்கள வேட்பாளராலும் 50 சதவீத வாக்குகளைப் பெறமுடியாமல்போகும் பட்சத்தில் நாட்டின் அரசியல் நிலைவரம் கவலைக்கிடமாகலாம்.

பல தீயசக்திகள் நாட்டில் குழப்பநிலையைத் தோற்றுவிக்க முனையலாம். சீனா தனது படையை நாட்டுக்கு அனுப்பவிருப்பதாக செய்தி வந்திருக்கிறது. இது சிறுபான்மையினருக்குப் பாதிப்பை ஏற்படுத்தலாம். நாட்டின் பொருளாதார நிலைவரத்திலும், ஸ்திரத்தன்மையிலும் பெரும் பின்னடைவை ஏற்படுத்தக்கூடும்.

வெளிநாட்டு ஊடுருவல்கள் நிலைமையை மேலும் மோசமாக்கலாம். இவையனைத்தையும் கருத்திற்கொண்டே தேர்தலை பிற்போடுவது சிறந்தது என்று நான் கூறினேன். அதேவேளை நாட்டின் நலன்கருதி மூன்று பிரதான வேட்பாளர்களும் இதனை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து கலந்தாலோசிக்கலாம் எனவும் கூறினேன்.

அவ்வாறு கூறியதை மனதில் வைத்துத்தான் சில ஊடகங்கள் நான் ஒரு குறிப்பிட்ட வேட்பாளருக்கு தமிழ் மக்கள் 2 ஆவது விருப்பு வாக்கை அளிக்கவேண்டும் என்று கூறியதாக தவறாக செய்தி வெளியிட்டிருக்கின்றார்கள். நாட்டின் நலன்கருதி நான் கூறியதற்கும் தமிழ் பொதுவேட்பாளர் தெரிவில் எனது திடமான முடிவுக்கும் உறவமைத்து கூறியமை பத்திரிகையாளர்களின் ஊகமாகும்.

தமிழ் பொதுவேட்பாளருக்கே தமிழ் மக்கள் தமது முதல் வாக்கை அளிக்கவேண்டும். 2 ஆம், 3 ஆம் விருப்பு வாக்குகளைப் பயன்படுத்துவது தமிழ் மக்களின் ஜனநாயக உரிமையாகும். இன்னாருக்கு அதனை அளியுங்கள் என்று எந்தத் தருணத்திலும் நான் கூறவில்லை. கூறவும் மாட்டேன். - என்றார்.

(05)

# ஜனாதிபதி ரணிலுடன் நான் சந்தித்தமை பரகசியமானது

## அனந்தி சசிதரன் விளக்கமளிப்பு



நான் ஜனாதிபதியுடன் இரகசியமான சந்திப்பில் ஈடுபடவில்லை. பரகசியமான சந்திப்பிலேயே ஈடுபட்டேன் என வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சரும் ஈழ மக்கள் சுயாட்சிக் கழகத்தின் செயலாளர் நாயகமான ஆனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

அவரது இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஜனாதிபதி வேட்பாளர்கள் என்ற வகையில் கடந்த மாதம் சஜித் பிரேமதாஸவைச் சந்தித்து இருந்தேன். வடக்கு கிழக்கு மக்கள் தொடர்பான அவர்களுடைய நிலைப்பாடு என்ன என்பதை நான் கேட்டுக் கொண்டேன்.

அதேபோல ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவையும் நான் சந்தித்திருந்தேன். நான் ஏற்கனவே வடக்கு மாகாண சபையின் உறுப்பினராகவும் அமைச்சராகவும் இருந்திருக்கின்றேன். தற்பொழுது ஈழத்தமிழர்சுயாட்சிகழகத்தினுடைய செயலாளர் நாயகமாகவும் பணியாற்றுகின்றேன்.

ஒருமரியாதையின் நிமிர்த்தமே நான் ஜனாதிபதி வேட்பாளரை சந்திக்கின்றேன். அந்த சந்திப்பில், பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பாக அவருடைய நிலைப்பாடு என்ன? அவரது தேர்தல் விஞ்ஞாபனத்தில் பாதிக்கப்பட்டவர்கள் குறித்தான தீர்வுகள் என்ன என்பது தொடர்பாக கேட்டுத் தெரிந்து கொள்கின்ற நிலையில் இந்த சந்திப்பை மேற்கொண்டேன்.

இந்த சந்திப்பானது இரகசியம் அல்ல. பரகசியமான சந்திப்பு தான். அந்த வகையில் நான், தொடர்ந்தும் ஏனைய ஜனாதிபதி வேட்பாளர்கள் எனக்கு அழைப்பு விடுக்கின்ற சந்தர்ப்பத்தில் அவர்களையும் சந்தித்து அவர்களுடைய நிலைப்பாடுகள் என்ன என்பதை அறிந்து மக்களுக்கு சொல்வதில் நான் தயாராக இருக்கின்றேன்.(05)

# கிழக்கு ஆளுநரிடம் ஆதரவு கோரிய ரணில்



எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தனக்கு ஆதரவளிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கிழக்கு மாகாண ஆளுநரும் இ.தொ.கா. தலைவருமான செந்தில்தொண்டமானிடம் கேட்டுள்ளார்.

இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் ஏற்பாட்டில் மட்டக்களப்பில் இளைஞர் வலுவூட்டல் நிகழ்ச்சி ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, மட்டக்களப்பு மாவட்ட இளைஞர்களிடம் நாட்டை கட்டியெழுப்ப ஜனாதிபதி வைத்துள்ள எதிர்கால திட்டங்கள் என்ன என்பதை தெளிவூட்டியதுடன், நாட்டை கட்டியெழுப்புவதற்கான ஆலோசனைகள் மற்றும் இளைஞர்களின் எதிர்பார்ப்புகள் என்னவென்று கேட்டறிந்தார்.

மேலும், இளைஞர்கள் வேலை வாய்ப்பின்றி நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். எதிர்காலத்தில் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பை அதிகரிப்பதாகவும், ஐ.எம்.எவ். கடன் மறுசீரமைப்பின் ஊடாக 2035 ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்படவுள்ள செயற்றிட்டங்கள் குறித்து தெளிவூட்டினார்.

இந்தக் கலந்துரையாடல் நிறைவின் போது ஜனாதிபதி ரணில் இ.தொ.கா. தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமானிடம் கிழக்கிலும் மலையகத்திலும் ஆதரவு கோரினார்.(05)

# கசிப்புக் காய்ச்சும் உபகரணங்களுடன் குடாநாட்டில் சந்தேகநபர் ஒருவர் கைது



யாழ்ப்பாணம் மானிப்பாய் பகுதியில் கசிப்பு மற்றும் கசிப்பு காய்ச்சும் உபகரணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாண மாவட்ட குற்றத் தடுப்புப்பிரிவு பொலிஸாரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கைப்பற்றப்பட்ட பொருள்கள் ஒரு லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியானவை என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரை நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (05)

# சட்டவிரோதமாக மணல் ஏற்றியவர் கைதானார்

## மட்டக்களப்பில் சம்பவம்



மட்டக்களப்பு, வவுணதீவு பொலிஸ் பிரிவில் சட்ட விரோதமாக மணல் ஏற்றிச் சென்ற உழவு இயந்திரத்துடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர்.

வவுணதீவு பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர் ஈ.எம். கெமுனு வசத்த தலைமையிலான பொலிஸ் குழுவினர் கொத்தியாபுல பகுதியில் வைத்து திங்கட்கிழமை சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரை மணல் நிரப் பப்பட்ட உழவு இயந்திரத் துடன் நீதிமன்றில் முன்னிலைப் படுத்துவதற்கானசட்ட நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டுவருகின்றனர். (05)

# கிணற்றுக்குள் தவறி விழுந்தவர் தும்பளையில் பரிதாபச் சாவு

யாழ்ப்பாணம், பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தும்பளை பகுதியில் கிணற்றுக்குள் விழுந்து வீழ்ந்து ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறை, தும்பளை பகுதியைச் சேர்ந்த 47 வயதுடைய நபரொருவரே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்து பிள்ளையான் நடத்துகிறார் கூட்டம்





எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவிக்கும் பிரமாண்ட மக்கள் சந்திப்பு அக்கட்சியின் அம்பாறை மாவட்ட கிளையின் ஏற்பாட்டில் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவரும் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் அம்பாறை காரைதீவில் நடைபெற்றது.

இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் அழைப்பையேற்று கடந்த ஜீன் மாதம் 23 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மட்டக்களப்பு மாவட்டத்திற்கான விஜயம் மேற்கொண்டிருந்த நிலையில் குறித்த கட்சியின் தலைமை காரியாலயத்திற்கு வருகை தந்திருந்த போது அக்கட்சியின் செயற்குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட முக்கியஸ்தர்களுடன் கலந்துரையாடி இருந்ததுடன் ஆதரவாளர்களையும் சந்தித்து கலந்துரையாடி இருந்தார்.

அதன்அடிப்படையில்ரணில்விக்ரமசிங்கவுக்கான ஆதரவை தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி அறிவித்திருந்தது. அந்த வகையில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவிக்கும் மக்கள் சந்திப்புக்களை நடத்தி வரும் நிலையில், அமைப்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழ் கிராமங்களை ஒன்றிணைத்து பிரமாண்டமான மக்கள் சந்திப்பு ஒன்றை அக்கட்சி நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# சிறுவனை கார்ப்பர்ட் வீதிக்கு இழுத்து தாக்கியவர்கள் கைது





(எச்.எம்.எம்.பர்ஸான்)

சிறுவன்ஒருவனைகாபர்ட்வீதியில் இழுத்துச்சென்றுதாக்கியகுற்றச்சாட்டில் நபரொருவர் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறுவனை தாக்கிய சம்பவம் ஞாயிற்றுக்கிழமை வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொழும்பு வீதி நாவலடி பகுதியில் வைத்து இடம்பெற்றுள்ளது.

கராஜ் நடத்தும் உரிமையாளர் ஒருவர் அவரது கராஜ்ஜில் சிறுவன் திருடியதாக குற்றம் சுமத்தி இறும்புக் கம்பியை கையில் வைத்தவாறு சிறுவனைகார்ப்பர்ட்வீதியால்இழுத்துச் செல்லும்காட்சியைஅவ்வீதியால்வந்த நபரொருவர் கைபேசியில் வீடியோ எடுத்து சமூக வலைத்தளங்களில் பதிவேற்றம் செய்துள்ளார்.


இந்நிலையில், சிறுவன் சிகிச்சைக்காக வாழைச்சேனை ஆதாரவைத்தியசாலையில்சேர்க்கப்பட்டுள்ளதுடன், சிறுவனை தாக்கிய குற்றச்சாட்டில் கிரேஜ் உரிமையாளர் வாழைச்சேனை பொலிஸாரால்கைது செய்யப்பட்டுள்ளார். (05)

யாழ்ப்பாண வர்த்தகத் தொழிற்துறை மன்றம் ஒழுங்கமைத்து நடாத்தும்

CHAMBER OF COMMERCE AND INDUSTRIES OF YARLPANAM
CCIY
UNITY IS STRENGTH

JAFFNA INTERNATIONAL BOOK FESTIVEL
யாழ்ப்பாண சர்வதேச புத்தகத் திருவிழா
JIBF 2024

யாழ்ப்பாண சர்வதேச புத்தகத் திருவிழா - 2024
Jaffna International Book Festival - 2024



ஆகஸ்ட் – 9 ,10 மற்றும் 11 ம் திகதிகளில்
9th ,10th & 11th August - 2024

யாழ்ப்பாண கலாச்சார மத்திய நிலையம்
Jaffna Cultural Centre – Exhibition gallery space

CCIY . 63- NALLUR CROSS ROAD. NALLUR. JAFFNA | info@cciy.lk | 070 366 3603

ஊடக பங்காளர்கள் காலைக்கதிர்

காலைக்கதிர்
Kalaikkathir

# 54 அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டு 34 வருடமாகியும் இன்னும் நீதி கிடைக்கவில்லை!

## திராய்க்கேணி படுகொலை தினத்தில் ஜெயசிறில் உரை

(வி.ரி.சகாதேவராஜா)

திராய்க்கேணியில் 54 அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டு34வருடமாகியும்இன்னும்நீதிகிடைக்கவில்லை.

இவ்வாறு திராய்க்கேணி படுகொலை தினத்தில் உரையாற்றிய தமிழரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச தலைவரும் முன்னாள் தவிசாளருமான கி.ஜெயசிறில் குறிப்பிட்டார்.

1990 ஒகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி இடம்பெற்ற திராய்க்கேணி படுகொலை சம்பவத்தின் 34 ஆவது வருட நினைவேந்தல் நிகழ்வு, சம்பவம் இடம்பெற்ற திராய்க்கேணி ஶ்ரீமுத்துமாரியம்மன் ஆலயத்தில் நேற்று(செவ்வாய்க்கிழமை) நடைபெற்றது.

சூழலியல் நீதிக்கான மக்கள் கூடல் அமைப்பின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் துரையப்பா காத்தவராயன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் காரைதீவு பிரதேச சபை முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், பிரபல சமூக செயற்பாட்டாளர் தா.பிரதீபன் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டார்கள்.













ஆரம்பத்தில், படுகொலையின் போது வெட்டிக்கொலை செய்யப்பட்ட 54 பேர் நினைவாக ஈகைச்சுடர் ஏற்றப்பட்டது.

மலர் அஞ்சலி செலுத்தி அக வணக்கம் செலுத்தப்பட்டது.

ஆலயத்தில் விசேட பூசை இடம்பெற்றது.

படுகொலை சம்பவத்தில் கணவர்மாரை இழந்து விதவைகளான 40 பேரில், நேரிலே கண்முன்னே சம்பவத்தை பார்த்து இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றவர்கள் கருத்துக்களை அழுதழுது கூறினார்கள்.

அவர் மேலும் உரையாற்றுகையில் -

இலங்கை நாட்டிலே சுதந்திரத்திற்கு பின்பு திட்டமிட்டவகையில் 1956 ,1985 ,1990,2009 வரை தமிழ் மக்கள் திட்டமிடப்பட்டு படுகொலை செய்யப்பட்டு வந்திருக்கின்றார்கள்.

ஆனால் இதுவரை அப் படுகொலைகளுக்கு நீதியோ, நஷ்ட ஈடோ கிடைக்கவில்லை.

எந்த இனமாக இருந்தாலும் ஆலயம் என்பது புனித ஸ்தலமாக இருக்கும். ஆனால் துரதிஷ்டவசமாக இலங்கையில் இந்து ஆலயத்தில் தான் அதிகமான படுகொலைகள் இடம் பெற்று இருக்கின்றன. அரசாங்கமே இராணுவத்தையும், முஸ்லிம் ஊர்காவல் படையினரையும் பயன்படுத்தி இந்தத் திட்டமிட்ட படுகொலையை செய்தது .

வீரமுனையிலும்ஆலயத்தில்வைத்துநூற்றுக்கணக்கான அப்பாவி தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

இந்த வரலாற்றை எல்லாம் நாங்கள் அடுத்த சந்ததிக்கு எடுத்துசெல்ல வேண்டும். சமகால சந்ததியினர் சுதந்திரமாக நிம்மதியாக வாழ வேண்டும் என்பதற்காக இத்தகைய நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

அம்பாறை மாவட்டத்திலேயே 58 தமிழ்கிராமங்களை இலக்கு வைத்து இன அழிப்பு நடத்தப்பட்டது. ஆலங்குளம், மீனோடைக்கட்டு போன்ற கிராமங்கள் ஒரு தமிழர்களும் இல்லாமல் முற்றாக கபளீகரம் செய்யப்பட்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் இராணுவமும் முஸ்லிம் ஊர்காவல் படையினர் இனவாதிகள் இணைந்து செய்தார்கள் என்பது மாற்றுக் கருத்துக்களுக்கு இட இல்லை.

எமது அடையாளத்தை நாங்கள் பேணவேண்டுமாக இருந்தால் அரசியல் ரீதியான தீர்வு கிடைக்க வேண்டுமாக இருந்தால் நாங்கள் தொடர்ச்சியாக அமைதி வழி அறவழிப்போராட்டத்தில் ஈடுபட வேண்டும். அதைத்தான் எமது கட்சியும் செய்து கொண்டிருக்கிறது.

நில ஆக்கிரமிப்பின் மறுவடிவமே திராய்க்கேணி படுகொலையாகும்.

அம்பாறை மாவட்ட தமிழர்களின் அடையாளத்தை இல்லா தொழிக்கவேண்டும் என்பதற்காக 1983 களிலிருந்து தொடர்ச்சியாக திட்டமிட்டு பல படுகொலைகளை செய்துள்ளார்கள். உண்மையில் அது நில ஆக்கிரமிப்பின் மறுவடிவமே. அந்த வகையில் குரூரமாக ஈவிரக்கமின்றி மேற்கொள்ளப்பட்ட திராய்க்கேணி படுகொலைக்கு இன்று 34 வருடங்களாகின்றன.

1990களில் இராணுவம் சில முஸ்லிம் இளைஞர்களின் உதவியோடு இங்கு செய்த இந்த குரூர கொலையானது, பரம்பரை பரம்பரையாக தமிழ்மக்களின் மனங்களிலே நினைவு கூரப்படும் .

இந்த பாமர மக்களை கொலை செய்தவர்களையும், எமது இனத்தின் மீது பாரிய அநியாயங்களை செய்தவர்களையும் நாங்கள் மறக்கவும் மாட்டோம், மன்னிக்கவும் மாட்டோம்.

நாம் எந்த ஓர் இனத்திற்கோ சாதிக்கோ அநியாயம் செய்ய மாட்டோம். நாங்கள் அவர்களுக்கு எதிரானவர்களும் அல்லர். .ஆனால் எமது நிலங்களை சூறையாட வருபவர்களுக்கு எதிராக நாங்கள் தொடர்ச்சியாக போராடுவோம்.

முஸ்லிம் மக்கள் அனைவரும் இதில் சம்மந்தப்பட்டார்கள் என்று கூறவில்லை. ஆனால் ஒரு சில முஸ்லிம் இனவாதிகள் முன்னணியில் இருந்து செய்யப்பட்டதை நேரடியாக கண்ணால் கண்ட திராய்க்கேணி மக்கள் இங்கு பேசுகையில் கூறுகின்றனர்.

6 நாள் குழந்தையை கூட ஆலமரத்தில் அடித்து ஈவிரக்கமின்றி கொன்றிருக்கின்றார்கள் .

இதுபோல் வீரமுனை ,உடும்பன் குளம் ,நாவிதன்வெளி நீலாவண, காரைதீவு ,பாண்டிருப்பு போன்ற பல இடங்கள் இவர்களின் கைவரிசைக்கு இலக்காகி இருக்கின்றது.

அவர்களால் செய்த அழிப்பு ஒரு நாள். ஆனால் அது காலகாலமாக மக்கள் நினைவில் வைத்திருப்பார்கள்.

தமிழ் மக்களின் அடையாளமே அழிக்கப்பட வேண்டும் என்பதே அவர்களின் இலக்கு.

இன்னும் இந்த கொலைகளுக்கு நீதி கிடைக்கவில்லை .ஒரு ஆறுதலுக்காவது ஒரு வழக்குத்தானும் போடப்படவில்லை. இந்த நிலையில் இங்கு இந்த மக்கள் ஐம்பது வீதமாக குறைந்து வாழ்க்கையை கடத்திக் கொண்டிருக்கின்றார்கள் .

இன்னும் நீங்கள் குறைய கூடாது என்பதற்காகவே இத்தகைய நிகழ்ச்சிகளை நடத்துகின்றோம். இந்த வரலாறு இளம் சந்ததியினருக்கு ஏத்தி வைக்கப்பட வேண்டும் என்பதையும், இனத்தின் மீது கை வைப்போரை மறக்கவும் மாட்டோம் ,மன்னிக்கவும் மாட்டோம் என்பதையும் தெளிவுபடுத்துவது இந்த நிகழ்ச்சியின் நோக்கம் என்றார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# பள்ளிவாசல்கள் மீள்பதிவு ஆரம்பம்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கடந்த 2019 ஆம் ஆண்டின் பின்னர் நாட்டில் புதிய பள்ளிவாசல்களைப் பதிவு செய்கின்ற நடவடிக்கைகளைமுஸ்லிம்சமயபண்பாட்டலுவல்கள் திணைக்களம் அமைச்சின் உத்தரவுக்கமைய நிறுத்தி வைத்திருந்தது.

அதன்பின்னர் இவ்விடயம் சம்பந்தமாக பல முறை பல முயற்சிகள் இடம்பெற்றிருந்தன. இந்த முயற்சிகள் அனைத்தும் கைகூடாமல் போனமை குறிப்பிடத்தக்கது. தற்போது புதிதாக திணைக்களத்தின் பணிப்பாளராக கடமையை பொறுப்பேற்றுள்ள எம்.எச்.ஏ.எம். றிப்லான், உதவிப் பணிப்பாளர் எம்.எஸ். அலா அஹமட் மற்றும் இலங்கை வக்ப் சபையின் உறுப்பினர் சட்டத்தரணி எம்.ஏ. மத்தீன் ஆகியோர் இவ்விடயம் சம்பந்தமாக புத்தசாசனம் மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் செயலாளரோடு பல சுற்றுப் பேச்சுகளை முழு மூச்சாக நடத்தி தடைப்பட்டிருந்த பள்ளிவாசல்களின்பதிவைமீண்டும்மீளஆரம்பித்துள்ளனர்.

அதன்பிரகாரம்01.08.2024முதல்பள்ளிவாசல்கள் மீள்பதிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் பதிவுச் சான்றிதழ்கள் பதிவு தபால் மூலம் பதிவு செய்யப்பட்ட பள்ளிவாசல்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(05)

# சுவாமி விபுலாநந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழா

(வி.ரி.சகாதேவராஜா)

இந்துசமயகலாசாரஅலுவல்கள்திணைக்களத்தின் பணிப்பாளர் ய. அநிருத்தனின் வழிகாட்டலின்கீழ் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் பெரியநீலாவணை விஷ்ணு மகா வித்தியாலயமும் இணைந்து நடத்திய முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழாத் தொடர் நிகழ்வு பாடசாலையின் அதிபர் எஸ்.குணராசா தலைமையில் சிறப்பாக இடம் பெற்றது.







காரைதீவில் இடம்பெற்ற துறவற நூற்றாண்டு விழா அங்குரார்ப்பண நிகழ்வைத் தொடர்ந்து இடம்பெறும் முதலாவது நிகழ்வு இதுவாகும்.

இந்நிகழ்வில் கல்முனை வலயக்கல்வி பணிமனையின் இந்துசமய பாடத்திற்கான ஆசிரிய ஆலோசகர் ம.லக்குணம், பிரதி அதிபர் எஸ்.கோகுலராஜ் திருமதி புண்ணியமலர் , கல்முனை வடக்கு பிரதேச செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி நா. ஸ்ரீபிரியா, வளவாளர் நா.சனாதனன், பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டனர் .

பாடசாலைகளுக்கான சுவாமியின் படங்களை சமயப்பற்றாளர் மகேந்திரன் வழங்கி வைத்தார்.

இதற்கான ஏற்பாடுகளை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் சார்பில் மாவட்ட செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் கு. ஜெயராஜி மேற்கொண்டிருந்தார். (05)

# சன் ஃபிளவர் ஸ்கில் அகடமியின் நான்காவது பொது பட்டமளிப்பு





(தில்சாத் பர்வீஸ்)

தொழில் பயிற்சி மையமான சன் ஃபிளவர் ஸ்கில் அகடமியின் நான்காவது பொதுப் பட்டமளிப்பு விழா அண்மையில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் தலைவர் முர்ஷித் மற்றும் நிறுவனர் ஹஃப்ரா முர்ஷித் தலைமையில் இடம் பெற்றது

பல பிரிவுகளில் தொழில் பயிற்சி கற்கைகளை பூர்த்தி செய்த 250 இற்கும் மேற்பட்ட பெண் மாணவிகள்பட்டம்பெற்றுள்ளமைசிறப்புஅம்சமாகும்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் மற்றும் முன்னாள் கொழும்பு மேயர் ரோஸி சேனாநாயக்க விசேட அதிதிகள், மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தார்கள். (05)

# கற்பிட்டிக் கோட்டத்துக்கு புதிய கல்விப் பணிப்பாளர்



(எம் சியாஜ்)

கற்பிட்டி கோட்ட கல்விப் பணிப் பாளராக கடமையாற்றிய தீப்தி பெர்னாண்டோ பதவி உயர்வு பெற்று புத்தளம்வலயக்கல்விபணிமனைக்கு நியமனம் பெற்றதை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கே கற்பிட்டியைச்சேர்ந்த புதிதாக கல்வி நிர்வாக சேவைக்கு தெரிவு செய்யப்பட்ட ஏ.எம் ஜவாத் நியமிக்க பட்டுள்ளார்.

அவர்நேற்று(செவ்வாய்க்கிழமை) தமது கடமையை பொறுப்பேற்றுக் கொண்டார்.

(05)

# உள்நாட்டு துப்பாக்கிகளுடன் இருவர் திருமலையில் கைது

திருகோணமலை, ஈச்சிலம்பற்று பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகளுடன் இரண்டு சந்தேக நபர்கள் கந்தளாய் இலஞ்ச ஊழல் தடுப்பு பிரிவினரால் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கந்தளாய்இலஞ்சஊழல்தடுப்புபிரிவினருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஈச்சலம்பற்று பகுதியில் வசிக்கும் 45 மற்றும் 46 வயதுடைய இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இரண்டு துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஈச்சிலம்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# சர்வதேசத்திடம் இருந்துதான் நீதியை எதிர்பார்க்கின்றோம்

## காணாமற்போனோரின் உறவுகள் தெரிவிப்பு



(ஹஸ்பர் ஏ.எச்)

சர்வதேசத்திடம் தான் நீதியை எதிர்பார்க்கிறோம் என வலிந்து கடத்தப்பட்டு காணாமல் போனனுவர்களின் உறவினர்கள் சங்க அம்பாறை மாவட்ட தலைவி த. செல்வராணி தெரிவித்தார்.

ஒகஸ்ட் 30 சர்வதேச காணாமல் போனோர் தினமாகும் அதனை முன்னிட்டுநேற்று(செவ்வாய்க்கிழமை) திருகோணமலையில் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கூறியதாவது -

இம் முறை சர்வதேச காணாமல் போன தினத்தினை திருகோணமலை நகரில் போராட்டமாக முன்னெடுக்கவுள்ளோம் இதற்காக அரசியல்வாதிகள், சிவில் சமூகத்தை சேர்ந்தவர்கள் என பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். தொடர்ச்சியாக எங்கள் போராட்டத்துக்கு இலங்கை அரசாங்கம்நீதியைபெற்றுத்தரவில்லை இதனால் 14 வருடகாலமாக போராட்டத்தில் ஈடுபட்டு எமது உறவுகளுக்காக பாடுபடுகிறோம். இறுதி யுத்தத்தின் போது சுமார் ஒன்றரை இலட்சம் மக்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள்இதில்50இற்கும் மேற்பட்ட குழந்தைகள் உள்ளனர். வடக்கு கிழக்கு எட்டு மாவட்டங்களில் போராட்டங்களை நடத்தி வருகிறோம் எமக்கான நீதியை சர்வதேசம் தான் பெற்றுத்தர வேண்டும். - என்றார்.

இதில்கிழக்குமாகாணத்தைசேர்ந்த திருகோணமலை,மட்டக்களப்புமற்றும் அம்பாறை மாவட்ட தலைவிகளும் கலந்து கொண்டனர்.(05)

# வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த பேராசான் கா. கைலாசநாதக் குருக்கள்

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
**மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்**
**மெல்பேண் ...ஆஸ்திரேலியா**

மண்ணைவிட்டு ஆளுமைகள் மறைந்தாலும் அவர்களின் மாண்புகள் என்றுமே மறைவதில்லை. எண்ணி எண்ணிப் பார்க்கும் அளவுக்கு அவர்கள் மண்ணிலே என்னாளும் வாழ்ந்து கொண்டே இருப்பார்கள் . அப்படி வாழ்ந்தவர்களைத் தான் ' வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர்கள் ' என்று வையகம் ஏற்றிப் போற்றி என்றும் நினைவில் நிறுத்தி

வைத்திருக்கிறது எனலாம். அப்படி இருக்கும் ஈழத்து ஆளுமையாக விளங்குவர்தான் நினைவில் நிறைந்திருக்கும் பேராசான் பேராசிரியர் கலாநிதி சிவஷ்ரீ கா. கைலாசநாதக் குருக்கள் ஆவர்.




பேராசிரியர் கலாநிதி சிவஸ்ரீ கா.கைலாசநாதக்குருக்கள்

குங்குமம் பொட்டு , கொட்டப்பாக்களவு குடுமி , முகத்தில் சாந்தம் , வெள்ளுடை வேந்தர் இப்படிச் சொன்னால் இப்படி நினைத்தால் கண்முன்னே வந்து நிற்பார் பேராசான் குருக்கள் அவர்கள்.

அமைதியான ஆனால் ஆழமான அழகான ஆங்கிலம் அழகு கொஞ்சும் அன்னைத்தமிழ் அஷ்ஷரம் மாறாத சமஸ்கிருதம் குருக்கள் அவர்களுக்கே உரித்தானதாகும்.

ஆடம்பரம் நாடுவதில்லை. அலங்காரம் செய்வதும் இல்லை. ஆர்ப்பாட்டம் இல்லா ஆளுமைதான் அவர்.கைலாசபதி கைகூப்பும் கைலாசநாதர் ! சிவத்தம்பி கௌரவிக்கும் சிந்தனையாளர் ! வித்தியின் வணக்கத்துக்குரியவர் ! சிங்களப் பேராசிரியர்களும்

வேட்டிகட்டிய வெள்ளுடை வேந்தரை வணங்கியே நிற்பர் ! சிங்களம் சிறக்கும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் செந்தண்மை பூண்ட அந்தணக் கோலத்தில் பேராசான் விரிவுரையாற்ற வரும் வேளை யாவராலும் கனம் செய்யப்பட்ட கண்ணியவான் ! இஃது தமிழுக்கும் பெருமை ! தமிழருக்கும் பெருமை அல்லவா ?




பேராசிரியர் குருக்கள் அவர்களை ஆசாரமிக்க அத்தணர் என்பதா , ஆகமக் கிரியைகளை ஆற்றும் சிவாசாரியப் பெருமகன் என்பதா , ஆன்மீகத்தில் நாட்டமிக்க பெரியவர் என்பதா , தமிழ் , ஆங்கிலம் , இலத்தீன் , பாளி , சமஸ்கிருதம், ஜேர்மன் , பிரெஞ்சு , என பன்மொழி அறிந்த பன்மொழியாளர் என்பதா, பல்கலைக்கழகத்தில் உயர்பட்டம் பெற்ற கல்விமான் என்பதா , பல்கலைக்கழகத்தில் பல உயர் பதவிகளை அலங்கரிந்த பெருந்தகை என்பதா, யாவராலும் மதிக்கப்பட்ட கண்ணியவான் என்பதா என்னும் எண்ணமே என்மனதில் எழுகின்றது.இப்படி எண்ணுவது என் எண்ணம் மட்டுமல்ல அவரை அறிந்தார்கள் அனைவரதும் எண்ணமுமே இதுவாகும் என்பதும் கட்டாயம் சொல்லியே ஆகவேண்டியது எனலாம்.

அறிவு என்னும் தேட்டம் அனைத்தையும் திரட்டி எடுத்துக் கொண்டு என்றுமே குன்றாத பெரு மதிப்புடைய கல்விச் செல்வத்தை தனக்குள் வைத்திருக்காது யாவருக்கும் வழங்கும் பெரு நோக்குடையயவராய் அந்தண குலத்து ஒளிவிடும் விளக்காக உயர் பண்பாளராக மிளிர்ந்தவர்தான் பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் எனலாம்.

நாவலர் பெருமான் பிறந்து வளர்ந்து உயர்ந்த - ஊர்களில் சிறந்த ஊரான - நல்லூரில் சேர் பொன். இராமநாதனின் குருவாகத் திகழ்ந்தவரும் வேதாகம சோதிட விற்பன்னரும் ஆகமக்கிரிகை களை ஆற்றுவதில் ஈடிணையற்றவரு மான சிவஷ்ரீ கார்த்திகேய க்குருக்கள் முனீஸ்வரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஷ்ரீமதி சுந்தராம்பாள் தம்பதிகளுக்கு துர்மதி

வருஷம் 15/08/1921 ஆம் ஆண்டு பூராட நட்சத்திரத்தில் கைலாசநாதக் குருக்கள் இறை அருளால் பிறந்தார். கைலாசநாதப் பெருமானின் அனுக்கிரகத்தால் பிறந்த படியால் கைலாசநாதக் குருக்கள் என்னும் பெயரை பெற்றார்கள் சூட்டி மகிழ்ந்தார்கள்.இவருடன் சர்வலோகநாயகி அம்மாள் , இந்திராக்ஷி அம்மாள் , இரத்தின கைலாசநாதக் குருக்கள் , பாலா பரமேஸ்வரி சிவஷ்ரீ கார்த்திகேய க்குருக்கள் ஆகியோர் குடும்பத்தின் பிள்ளைச் செல்வங்களாக வந்து பிறந்தார்கள்.

குருக்கள் அவர்கள் பிறந்த வேளை அவர் வளர்ந்த வேளை பிற்காலத்தில் பெரும் ஆளுமையாக வருவார் என்பதை குருக்களும் எதிர்பார்க்கவில்லை பெற்றவர்களும் எதிர்பார்த்து இருக்கவுமில்லை. சேர் பொன். இராமநாதனின் குருவாகத் தந்தையார் விளங்கியதால் தனது பிள்ளையையும் சிறந்த சட்டத்துறை வல்லுனர் ஆக்க வேண்டும் என்றே கருதி இருந்தாராம். ஆனால் ஆண்டவனின் நினைப்போ வேறு வகையாய் அமைந்தது . ஆண்டவன் நினைப்பும் அனுக்கிரகமும் இணைந்த காரணத்தால் மிகச்சிறந்த ஆளுமை ஈழத்துக்கு வாய்க்கும் வண்ணம் அமைந்தது எனலாம். ' நினையாது முன்வந்து நிற்கினும் நிற்கும் எனையாளும் ஈசன் செயல் என்பது ' இதைத்தான் போலும்.என்றே எண்ணத் தோன்றுகிறது.

குருக்கள் அவர்களின் முதற்குருவே அவரது தந்தைதான். அவரிடம் ஐந்து வயதில் பாடங்கேட்கத் தொடங்கினார். தந்தையே எழுத்தறிவித்த இறைவன் ஆனார். ஏழாவது வயதில் அந்தணர்களுக்கு உரிய உபநயனம் , பிரமோப தேசம் ஆகியன முறையாக நடைபெற்றன. சமஸ்கிருத மொழியினைத் தந்தை யாரிடம் கற்கத் தொடங்கி வைதிகக் கல்வியான வேத அத்யயனத்தை வைக்கம் பிரம்மஷ்ரீ க. சிதம்பரநாத சாஸ்திரி களிடமும் , சுன்னாகம் பிரம்மஷ்ரீ பி.வி. சிதம்பரநாத சாஸ்திரி களிடமும் , கோப்பாயில் பிரம்மஷ்ரீ ஷ்ரீநிவாஸ சாஸ்திரிகளிடம் என்று பத்தாண்டுகள் மரபுவழியாக வேதம்மோதும் விசேட பயிற்சியைச் சிறப்பாகப் பெற்றுக் கொண்டார். ஆகமம் சார்ந்த கல்வியை தந்தையாரிடமே பெற்றுக் கொண்டார் குருக்கள் அவர்கள்.

உரிய முறையிலான பாடசாலை ஆரம்பக்கல்வியை நல்லூர் மங்கையர்கரசி வித்தியாலயத்தில் பெற்றுக்கொண்டார். அதன் பின்னர் சேர். பொன். இராமநாதனால் உருவாக்கப்பட்ட பரமேஸ்வராக் கல்லூரியில் பெற்றுக் கொண்டார்.

வியாகரண சிரோமணி பிரம்மஷ்ரீ சீதாராம சாஸ்திரிகளிடம் பாணினீய வியாகரணம் , காவ்யங்கள் , நாடகங்கள் , அலங்கார சாஸ்திரங்கள் , ஆகியவற்றை மரபு வழிக் கல்வி மூலம் கற்றதோடு அமையாது சமஸ்கிருத மொழியில் சிறந்த பாண்டித்தியத்தையும் பெற்றுக் கொண்டார்.


தனது அறிவுத்தேடலில் பயணப் பட்டுக் கொண்டிருக்கும் வேளையில் தந்தையின் கட்டளையினை சிரமேற் கொண்டு தனது பதினெட்டாவது வயதில் முனீஸ்வரம் சிவஷ்ரீ சாம்பசிவக் குருக்கள் கமலாம்பிகை தம்பதிகளின் மகளான பனிரெண்டு வயது நிரம்பிய ஷ்ரீமதி திரிபுர சுந்தரி அம்மாளை வைதிக முறைப்படி 04/02/1940 இல் திருமணம் செய்து கொண்டு இல்லறமாம் நல்லறத்தில் இணைத்துவிட்டார் குருக்கள் அவர்கள்.

திருமணத்தின் முன் தொடங்கிய அறிவுத்தேடல் பயணத்தை பேராவலுடன் தொடர்ந்தார். மற்றவர்களாய் இருந்தால் குடும்பமெனும் சாகரத்துள் மூழ்கியே விடுவார்கள் ! ' கருவிலே திருவுடையாராகக் ' குருக்கள் பிறந்த காரணத்தால் எதுவுமே அவருக்கு அணை போட்டிட இயலாமற் போயிற்று என்றுதான் எண்ண வேண்டி உள்ளது.

ஆங்கிலம் , வரலாறு , கணிதம் , தமிழ் , ஆகிய பாடங்களை லண்டன் மெற்றிக் குலேசன் பரீட்சைக்கு எடுத்து 1941 ஆம் ஆண்டில் சித்தி அடைந்தார். அத்துடன் நின்றுவிடாது சமஸ்கிருத மொழியின் இலக்கியச் இலக்கியச் சிறப்பையும் அம்மொழியின் அவசியத்தையும் உணர்ந்து பிற மொழிகளுடன் ஒப்பீட்டடிப் படையில் அறிகின்ற ஆவல் மேலீட்டினினால் ஆங்கிலம், இலத்தீன், தமிழ் , சமஸ்கிருதம், ஆகிய பாடங்களை இலண்டன் இண்டர்மீடியட் பரீட்சையில் எடுத்து 1943 ஆம் ஆண்டில் சித்தியடைந்தார்.

## மகனை சட்ட நிபுணர் ஆக்கிட விரும்பிய தந்தையிடம் தன்மனதில் ஊன்றி விட்ட

சமஸ்கிருத மொழியினைக் கற்றுத் தேர்ந்திடும் விரும்பத்தினைக் குருக்கள் பணிவுடன் வெளிப்ப டுத்தினார். தாயாரும் தந்தையும் குருக்களை விட்டு- இவ்வுலகை விட்டு பிரியும் நிலை ஏற்பட்டதால் குருக்களின் மீது கோவில்



பொறுப்பும் குடும்பப் பொறுப்பும் புரோகிதப் பொறுப்பும் ஜோதிடப் பொறுப்பும் சுமையாக வந்து சேர்ந்தது. இப்படி வந்தால் -மற்றவர்கள் படிப்பாவது பள்ளியாவது என்று நினைக்கவே மாட்டார்கள். ஆனால் குருக்கள் படிப்பினையும் அவ்வழி பயணப் படுவதையும் எக்காரணங்களாலும் விட்டு விடவே இல்லை.

குடும்பத்தின் நிலைகருதி தான் கற்ற இலண்டன் கல்வியுடன் மானிப்பாய் இந்துக்கல்லூரியில் தமிழ் ஆசியராகக் கடமை ஆற்றினார்.

கஷ்டத்தின் மத்தியிலும் கற்றிடும் எண்ணமே மேலோங்கி நின்றதால் உயர்கல்வியைப் பெறுவதற்காக இலங்கையின் முதற் பல்கலைக்கழகமான கொழும்பு இலங்கைப் பல்கலைக்கழகத்தில் 1944 இல் கால்வைத்தார். சமஸ்கிருதம் , தமிழ் , பாளி , ஆகிய பாடங்களை முதலாமாண்டில் எடுத்து 1945 இல் சித்தியடைந்தார். பின்னர் சமஸ்கிருத மொழியைச் சிறப்புப் பாடமாகவும் தமிழை உப பாடமாகவும் கொண்டு சிறப்புக் கலைமாணிப் பட்டத்தினை 1947 இல் பெற்றுக் கொண்டார். அதன் பின் 1949 இல் சமஸ்கிருத மொழியில் முது கலைமாணிப் பட்டத்தையும் பெற்றுத் தன்னை உயர்த்திக் கொண்டார்.1947 ஆம் ஆண்டில் தற்காலிக விரிவுரை யாளராகக் குருக்கள் அவர்கள் கொழும்பு இலங்கை பல்கலை க்கழகத்தில் நியமிக்கப் பட்டார். இலண்டன் பல்கலைக்கழகத் தால் கொழும்புப் பலகலைக்கழகத்துக்கு முதன் முதலாக அனுப்பி வைக்கப்பட்ட ஜேர்மன் நாட்டு முதற் சமஸ்கிருதப் பேராசியையான பெற்றி ஹைமனிடம் கல்வி கற்ற பெருமையி னைக் குருக்கள் பெற்றுக் கொள்ளுகிறார். 1953 இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நிரந்தர சமஸ்கிருத விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார் குருக்கள் அவர்கள்.

குருக்கள் அவர்களின் கற்றல் தாகம் அடங்கா நிலையில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் முகமாக இந்திவாவின் பூனே பலகலைக்கழகம் சென்று புகழ்பூத்த பேராசிரியர் ஆர்.என். தண்டேகரின் வழிகாட்டலில் இதிகாச புராணங்களில் காணப்படும் சைவம் பற்றியும் தென் பாரதத்திலும் இலங்கையி லும் நிகழும் கிரிகைபற்றியும் ஆய்வினை மேற்கொண்டார். அவ்வாய்வினை ஆராய்ந்த பல்கலைக்கழகம் 1960 ஆம் ஆண்டு குருக்கள் அவர்களுக்குக் கலாநிதிப் பட்டத்தைனை வழங்கி பெருமைப்படுத்தியது.

இந்தோ ஆரிய மொழியில் வல்லுனநராக விளங்கிய பேராசிரியர் சு. கணபதிப்பிள்ளை, வைதிக இலக்கியத்திலும் பௌத்த மத தத்துவத்திலும் துறைபோந்தவரும் சமஸ்கிருத மொழிப் பேராசிரியருமான நு.ஙூி.ம்ள.பு .விஜய சேகரா ஆகியோர் குருக்களின் ஆராய்ச்சிக்கும் தேடலுக்கும் உறுதுணையாக விளங்கினார்கள்.

சேர். பொன். இராமநாதன் அவர்களின் கனவாக விளங்கிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பரமேஸ்வராக் கல்லூரியினை அடுத்தளமாகக் கொண்டு 10/06/1974 இல் யாழ்ப்பாண வளாகமாக உருவாக்கப்பட்டபோது மொழிகள் மற்றும் கலாசார கற்கை நெறித்துறையின் பதிற் தலைவராக நியமனம் பெற்றார் குருக்கள் அவர்கள்.

உலகில் எந்தவொரு பல்கலைக்கழகத்திலும் இடம்பெறாத துறைதான் இந்து நாகரிகத்துறையாகும். இதனை உருவாக்கிய பெருமை குருக்கள் அவர்களையே சாரும். அதற்கென்று பாடத்திட்டத்தையும் உருவாக்கியவரும் அவரேயாகிறார். 1975 இல் புதிதாக உருவான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதற் பேராசிரியராகவும் துறையின் தலைவராகவும் கைலாசநாதக் குருக்களே நியமனம் பெறும் பெரும்பேற்றினை பெறுவதற்கு அவரின் ஓயா உழைப்பும் உண்மைத்தன்மையும் ஆண்டவனிடம் கொண்ட அளவிலாப் பக்தியுமே காரணமெனலாம்.

அவர் உருவாக்கிய துறையூடாக முதல் கலைமாணிப் பட்டதாரியையும் கலாநிதிப் பட்டதாரியையும் குறுகிய காலத்தில் உருவாக்கிய குருக்களின் ஆளுமை வியக்கத்தக்கதேயாகும். இந்து நாகரிகத்துறையின் பொது சிறப்புக் கலைக் கற்கை நெறிகளோடு - பட்டப்பின் படிப்பின் டிப்ளோமா கற்கை நெறியில் இந்து நாகரிகத்தையும் ஒரு பாடமாகக் கற்பிப்பதற்குரிய

காலைக்கதிர் Kalaikkathir

# வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த பேராசான் கா. கைலாசநாதக் குருக்கள்

பாடத்திட்டதை உருவாக்கியதோடு நின்றுவிடாமல் இராமநாதன் நுண்கலைக் கழக நுண்கலைத் துறையின் தலைவராகவும் விளங்கி அங்குள்ள கற்கை நெறிகளையும் மேபடுத்தினார்.

குருக்கள் அவர்களின் அளவில்லா ஆளுமையால் அவரை நாடிப் பல தலைமைப்பதவிகள் வந்து குவிந்தன பல்கலைக்கழகத்தில் எனலாம்.

1977 இல் மனித பண்பியற் பீடாதிபதியாகவும் 1984 இல் பதில் கலைப் பீடாதிபதியாகவும் நியமிக்கப்பட்டார். இடைவிடாது படித்தும் பட்டங்கள் பெற்றும் பலரையும் உருவாக்கிய குருக்கள் அவர்கள் தன்னுடைய 39 வருட பல்கலைக்கழகப் பணியிலிருந்து 1986 இல் ஓய்வு பெற்றுக் கொண்டார். ஓய்வு பெற்றாலும் அவரின் சேவை தொடர்ந்து தேவைப் பட்டதால் 1987 தொடக்கம் 1989 ஆம் ஆண்டுவரை ஒப்பந்த அடிப்படியில் தனது பணிகளைப் பல்கலை க்கழகத்தினுக்கு வழங்கி நின்றார்.

யாழ்பல்கலைக்கழகத்தின் இந்து நாகரிகத்துறை , சமஸ்கிருதத்துறை, உயர்பட்ட ஆய்வுகளுக்கும் இலங்கையில் இருக்கும் பல்கலைக்கழகங்களின் சமஸ்கிருத மொழிபற்றிய உயர்பட்ட ஆய்வுகளுக்கும் ஆலோசகராகவும் பரீட்சகருமாகவும் குருக்கள் விளங்கினார்கள். அவரின் பல்துறை ஆற்றலை யாவரும் நாடியே நிற்கும் நிலை காணப்பட்டது.

குருக்கள் அவர்களின் பேராற்றலை வியந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவரை முதன் முதலாக ' வாழ்நாட் பேராசிரியர் ' என்னும் தகுதியை வழங்கிய தோடு 04/10/1998 இல் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் முதன்முதலாக

'இலக்கிய கலாநிதி' பட்டத்தினையும் வழங்கி யாழ்பல்கலை க்கழகமே பெருமையுற்றது எனலாம்.

பேராசான் குருக்களின் பெயர் சொல்லும் நூலாக ' வடமொழி இலக்கிய வரலாறு' திகழ்கிறது . இதன் அருமையும் பெருமை யும் கருதி இலங்கை அரசாங்கத்தால் சாகித்திய விருது அளித்துக் கௌரவம் செய்யப்பட்டது.

' சமஸ்கிருதம் கற்கும் மாணவர்களுக்கு மட்டுமன்றி இம் மொழியையும் இதன் இலக்கியச் சிறப்பினையும் பற்றி அறிய அவாவும் ஏனையோருக்கும் பயன்படும் வகை அமைதல் சாலச் சிறந்தது என்னும் எண்ணம் உண்டாயிற்று. எனவே மாணவரும் ஏனையோரும் வாசிக்கும் வண்ணம் இவ்வரலாற்றை உருவாக்க முனைந்தேன்' என்று இந்நூலின் முன்னுரையில் பேராசான் குருக்கள் சுட்டிவதே இப்படைப்பின் முக்கியதத்துவத்தை வெளிக் காட்டி நிற்கிறது எனலாம்.

இந்த நூலுக்கு பொன்னம்பலம் இராமநாதன் மருகரான முன்னாள் தபால் தந்தி ஒலிபரப்புத்துறை அமைச்சரும் சிறந்த கல்விமானும் இராமநாதன் கல்லூரியின் அதிபருமாய் இருந்த திரு சு. நடேசபிள்ளை அவர்களே சிறந்த ஒரு அணிந்துரை வழங்கிச் சிறப்பித்துள்ளார்.


பன்மொழி அறிஞரும் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிமாற்றம் செய்து யாவராலும் பாராட்டப்பட்டவரான எஸ்.என். ஷ்ரீ ராமதேசிகன் 1962 இல் சுதேசமித்திரன் பத்திரிகையில் ' வடமொழி இலக்கிய வரலாறு ' நூலினை விதந்து எழுதியுள்ளார்.

வீரகேசரி பத்திரிகையில் 1962 இல் 'வடமொழி இலக்கிய வரலாறு' மதிப்பு மிக்க பொக்கிஷம் என்று ரஜனி அவர்களால் சுட்டிக்காட்டப் பட்டிருக்கிறது.

ஆன்மீகப்பேச்சாளரும்எழுத்தாளரும்தொழில்திணைக்கழ ஆணையாளரும் விளங்கிய உருப்பிராய் செ. தனபாலசிங்கன் அவர்கள் தினகரன் பத்திரிகையில் பேராசான் குருக்கள் அவர்களின் ' வடமொழி இலக்கிய வரலாறு ' நூல்பற்றி - ' பண்டிதரும் பாமரரும் படித்தின்புற சரளமான இனிய நடையில் புதுமைநலமெருகிட்டு , தான் பெற்ற இன்பம் இவ்வையக மெல்லாம் பெறவேண்டும் என்ற பெரு நோக்கால் தமிழுலகுக்கு அளித்துள்ளார். நூலில் தொட்ட தொட்ட இடமெல்லாம் கலை ஞாயிறு கதிர் வீசுகிறது.புலமை உள்ளம் நிழலாடுகிறது. செந்தமிழ் பெருமக்கள் ஒவ்வொருவரும் படித்தின்புற வேண்டிய நூல்' என்று வியந்து எழுதியிருப்பது நோக்கத்தக்கதாகும்.

பேராசான் குருக்கள் அவர்களின் ஆராய்ச்சிகளின் பயனாக வந்த இன்னொரு நூல்தான் ' சைவத் திருக்கோயிற் கிரியை நெறி ' இந்த நூலினை ஆங்கிலத்தில் எழுதி வெளியிடவே பேராசான் ஆசைப்பட்டார். அதுவும் சாதாரணமாக அன்று. பத்துத் தொகுதிகளாய் வெளியிடுவதற்கு ஆசை கொண்டும் செயலாற்றி வந்தார். மிகப் பெரிய அளவில் நூல் அமைந்தால் யார் வாங்கு வார் ? விலையும் கூடிவிடும் ! வாசிப்பவர்களும் அருகி விடு வார்கள் என்னும் எண்ணமெல்லாம் அவர் மனதில் உதித்ததாம். அதனால் 300 பக்கம் அளவில் அதுவும் தமிழிலேயே அளித்தால் சிறப்பாக இருக்கும் என்று கருதி இந்நூலினை வழங்கினேன் என்று அவரே முன்னுரையில் தனது மனப்பதிவினை வெளிப் படுத்தி இருக்கிறார். தமிழில் இந்தநூல் வந்தபடியால் அனைத்து சிவாசாரிகர்களும் பாமரமக்களும் ' சைவக்கோயிலில் எப்படி யான கிரியைகள் நடை பெறுகின்றன ? அவற்றுக்கான அர்த்தம் தான் என்ன என்பதையெல்லாம் விளங்கவும் மனமிருத்தவும் வாய்ப்புக் கிட்டியது எனலாம்.பலருக்கும் பயனுள்ள நூலாக இந்த நூல் விளங்கிய காரணத்தால் மூன்றாம் பதிப்பினையும் கண்டு நிற்கிறது என்பது மனங் கொள் ளத் தக்கதாகும்.

தமிழ்மொழி மூலமாக சமஸ்கிருத மொழிப்பயிற்சிக்கென்று ' சமஸ்கிருத இலகு போதம் ' என்னும் நூலினை இரண்டு பகுதிகளாக வெளியிட்டார். ' இந்துப்பண்பாடு - சில சிந்தனைகள்' 1985 இல் யாழ்பல்கலைக்கழகத்தில் வெளியிடப்பட்டது.இவற்றை விட - விஷேஷ திரவ்ய ஹோம மந்திரங்கள் , தீபாராதனை வேத மந்திரங்கள் , வேத மந்திரங்களின் தொகுப்பு , ஷ்ரீ சக்ர பூஜை தொகுப்பு, சமஸ்கிருத கிரந்தாட்சர லகு போகம் , ஆகிய நூல்களையும் ஆக்கி அளித்திருக்கிறார் பேராசான் குருக்கள் அவர்கள். நூல்களுடன் நின்றமையாது ஆங்கிலத்திலும் தமிழிலும் பலகட்டுரைகளை பத்திரிகைகளுக்கும் மலர்களுக்கும் வழங்கி தன்னாளுமையினை வெளிக்காட்டி நின்றார் பேராசான் குருக்கள்.




வடஇலங்கை சமஸ்கிருத சங்கம் 17/0//1953 ஆம் ஆண்டில் திருவாளர் சு. நடேசபிள்ளை தலைமையில் திருநெல்வேலியில் அமைந்திருந்த பரமேஸ்வராக்நடைபெற்ற முதலாவது சமஸ்கிருத மாநாட்டில் ' சமஸ்கிருத இலக்கியங்கள் ' பற்றி பேராசான் குருக்கள் ஆற்றிய உரையினைக் கேட்டவர்கள் அத்தனைபேரும் பெருவியப்பெய்தினர் என்பது பதிவாகும்.1960 களில் இலங்கை வானொலியிலும் குருக்கள் சமஸ்கிருத இலக்கியங்கள் பற்றி தொடர்உரைஆற்றிவந்தார்என்பதும் நோக்கத்தக்கதாகும்.

## 1976 இல் சென்னையில் நடைபெற்ற அனைத்துலக இந்து மாநாடு

1977 இல் பேராசிரியர் ரி.எம்.பி. மகாதேவன் தலைமையில் மலேசியாவில் நடைபெற்ற இந்து மாநாடுகளில் உரையாற்றிய தோடு பல அரங்குகளுக்கு தலைமையும் தாங்கி பெருமைக்கு ஆளானார்.

இலங்கை கல்வி உயர்கல்வி அமைச்சின் இந்துசமய பாட ஆலோசனைக் குழுவில் 1976 தொடக்கம் 1985 ஆம் ஆண்டுவரை அங்கம் வகித்தார். இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திலும் அளப்பரும் பணிகள் பலவற்றை பேராசான் குருக்கள் ஆற்றி நின்றார்.

பேராசான் குருக்கள் அவர்களின் கலை இலக்கிய சேவை களையும் சைவ சமயத்துக்கு இவராற்றிய தொண்டினையும் கௌரவிக்கும் வகையில் 1982 இல் கொழும்பு கலை இலக்கிய பத்திரிகை நண்பர்கள் மணிவிழா எடுத்துச் சிறப்பித்தனர்.

பேராசான் குருக்களின் வேத ஆகம வித்துவத்தை விதந்து இலங்கை அரசாங்க இந்துசமய பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு ' வேதாகம மாமணி ' என்னும் விருதினை வழங்கியது.

## சிவநெறிக்கழகமும் அழகப்பா கல்லூரியும் இணைந்து 1991 இல்

' சிவாகம ஞான பானு ' என்னும் பட்டத்தை வழங்கி பேராசானின் வித்துவத்தை மெச்சியது.

' பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் இந்தநாட்டின் புகழ் பூத்த ஒரு கல்விமானும் , சமயத் தலைவரும் ஆவார். இந்து தத்துவம் , சமஸ்கிருதம் , ஆகியவற்றிலே துறை தோய்ந்தவர். பன்மொழி ஆற்றல் மிக்கவர்.

நான் மாணவனாக இருந்த காலம் தொடக்கம் பேராசிரியர் அவர்களை நன்கு அறிவேன்.பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சமஸ்கிருதத்துறையில் அவர் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணி புரிந்தார். அவரது காலத்தில் சமஸ்கிருதத்துறையில் முன்னணி பேராசிரியர்களான விஜயசேகர, திலகஷ்ரீ, ஜயசூரிய, போன்றவர்க ளுடன் இணைந்து செயற்பட்டார். பேராதனைப் பல்கலைக்கழகத் தில் படித்த தமிழ் மாணவர்களின் கல்வி நடவடிக்கையில் பெரும் பங்கு வகித்தார். பேராதனையில் அமைந்துள்ள குறிஞ்சிக்குமரன் ஆலய பணிகளில் இந்து சங்கத்துடன் இணைந்து பணிபுரிந்து திருக்கோயில் அமைக்கின்ற காரியங்களுக்குப் பெரும் பங்கா ற்றினார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இந்துநாகரிகத்துறை பேராசிரியராக நியமிக்கபட்ட இவர் இந்துக் கற்கை நெறியினை அகில இலங்கை ரீதியாக வளர்த்து எடுப்பதற்கு பாடசாலைகள் , கல்விக்கூடங்கள் , பல்கலைக்கழகம் ஆகியவற்றில் அரும் பணி கள் ஆற்றியுள்ளார். இவரது பணிகளாலேயே இந்து நாகரிகத் துறை ஒரு கற்கை நெறியாக இன்றும் இருந்து வருகிறது. இந்து நாகரிகத்திலே பல உப பிரிவுகள் அமைய வேண்டும் என்பதே இவரது பெருவிருப்பாகும். இன்று அந்த நோக்கங்களில் ஒன்றாக இந்து தத்துவம் ஒரு ஒரு கற்கை நெறியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இவை மட்டுமன்றி அந்தணச் சிறுவர்களுடைய வேத பாராயண குருகுல பாரம்பரியங்களை வளர்த்தெடுப்பதற்கும் பேராசிரியர் அவர்கள் அரும்பணிகள் ஆற்றியுள்ளார். ' என்று யாழ் பல்கலை க்கழகத்தின் துணைவேந்தராய் இருந்த பேராசிரியர் பொ. பால சுந்தரம்பிள்ளை வியந்து மகிழ்கிறார்.

'சிவாசாரிய சமூகத்துக்கும், இந்து சமயத்துக்கும் , சிறப்பாக கல்விச் சமூகத் துக்குமாக ஆற்றிய பணி மிகப்பெரியது. அப்பெருந்தகையின் வழிகாட்டலில் உருவாகிய மாணவ சமூகம் அளைப்பரியது ' யாழ்பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராய் இருந்த பேராசிரியர் இரத்தினம் விக்னேஸ்வரன் இவ்வாறு பாராட்டியுள்ளார்.

பல்கலைக்கழகத்தில் உயர்நிலையில் இருந்தாலும் ஆன்மீக த்தை மட்டும் பேராசான் விட்டு விலகியதே இல்லை. 1957 ஆம் ஆண்டு முதல் 1985 ஆம் ஆண்டுவரை அதிகாலையில் இடை யறாது ஷ்ரீ சக்ர பூஜை செய்து வந்ததோடு மானசீகமாக தேவீ மஹாத்மியத்தை பாராயணமும் செய்து வந்தார்.

மந்திரம் ,கிரியை , பாவனை என்பவற்றைத் தன்னகத்தே கொண்ட கிரியை என்னும் கலையை நிகழ்த்துவதில் ஈடிணை யற்று விளங்கினார். தன்னுடைய 12 ஆவது வயது முதல் 10 வருடங்களாக தந்தையாரின் சமயக்கிரிகைகளிம் போது பத்ததி வாசித்து சாதகராக விளங்கி இருக்கிறார் பேராசான் குருக்கள் அவர்கள்.


வசந்த நவராத்திரி காலங்களில் முனீஸ்வரத்தில் 1976 ஆம் ஆண்டு முதலாக சதசண்டி ஹோமத்தையும் நல்லூரில் கமலாம்பிகைக்கு நவராத்திரி காலங்களில் தசசண்டி ஹோமத்தையும் தாந்திரீக முறைப்படி தாமே ஆரம்பித்து பிரதான சிவாசாரியராக இருந்து சிறப்புடன் பக்தி பூர்வமாகச் செய்தார்கள்.

பலகும்பாவிசேகங்கள் , உற்சவங்கள், யாகங்கள் யாவற்றுக்கும் தலைமை தாங்கி பக்திபூர்வமாக யாவற்றையும் ஆற்றி நாட்டுக்கும் மக்களுக்கும் நலன் பெருக ஆண்டவனைப் பிரார்த்துக் கருமங்களை ஆற்றி நின்றார்கள் பேராசான் அவர்கள்.

குருத்துவ பாரம்பரியத்தினை உரிய அடித்தளங்களுடன் உருவாக்க எண்ணங் கொண்ட பேராசான் அவர்கள் 60 பது களில் முனீஸ்வரத்தில் ஆரம்பிக்கப்பட்ட ' விஸ்வ வித்யா பீடத்தில் ' சிவாச்சாரிய மாணவர்களுக்கு சனி, ஞாயிறு , தினங்களில் கற்பித்து வந்ததோடு தமது வீட்டில் 1980 இல் ஆரம்பிக்கப்பட்ட ஷ்ரீ வித்யா குருகுலத்தில் தாமே காலை மாலை வேளைகளில் வேதமந்திரங்களை அத்யயனம் செய்து வந்தார்கள். இதன் விரிவான நிலை முழுநேர குருகுலமாக 1990 இல் ஏற்பட்ட போதும் நாட்டில் ஏற்பட்ட சூழ்நிலை காரணமாக தடைப்படவே 1990 இல் கொழும்பு சென்று செட்டியார் தெரு முத்துவிநாயகர் ஆலயத்தில் குருகுலம், வேதாகம பாட சாலை என்பவற்றுடன் இணைந்த ' ஷ்ரீ முத்துவிநாயகர் வேதாகம ஆய்வு நிறுவனத்தை ' அமைத்து வகுப்புகளைப் பேராசான் நடத்தி வந்தார்.

பேராசானின் இல்லறமாம் நல்லறத்தில் வாரிசுகளாக நன்முத்துக்களாக ஷ்ரீமதி கௌரி, பிரம்மஷ்ரீ ஷ்ரீதரன், பிள்ளைச் செல்வங்களாக வந்தமைந்தார்கள் . ஈழத்தில் இருந்த இருந்த ஆளுமை பேராசான் குருக்கள் அவர்கள் 1997 இல் அவுஸ்திரேலிய நாட்டில் குடியுரிமை பெற்று அவுஸ்திரேலிய நாட்டில் காலடி வைத்தார்கள். இங்கு வந்தும் அவரின் ஆன்மீகம் பணிகள் ஓயவே இல்லை.

# வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த பேராசான் கா. கைலாசநாதக் குருக்கள்




மெல்பேண் ஷ்ரீ சிவா விஷ்ணு ஆலயத்தின் ஆரம்ப ஆலோசகராகச் செயற்பட்டு உரிய வழிகாட்டுதல்களை வழுங்கி செயற்பட்டார்.

பேராசினின் மேல் பெரு மரியாதை கொண்ட எங்கள் சித்தி பாலம்லக்ஷ்மணன்அமையார்அவரின்வரலாற்றைஎழுதும்படி வேண்டி நின்றார். பேராசானும் எழுதத்தொடங்கினார்.... ஆனால் இடைவிடாது இயங்கிவந்த பேராளுமையான பேராசான் பேராசிரியர் கைலாசநாதக்குருக்களின் பணிகள் மண்ணுலக்குக்குப்போதும்என்றுகருதியகாரணத்தால்போலும் விண்ணுலகில் அவரைப் பணி ஆற்றுவதற்குஆண்டவன் 07/08 2000 அன்று அழைத்துக் கொண்டுவிட்டார்.

அவரோடு பழகிய ஆண்டுகள் என்னால் மறக்க முடியாத ஆண்டுகள் எனலாம்.நான் யாழ்ப்பாணம் கல்வித்திணைக் களத்தில் உதவிக்கல்வி இயக்குநராய் பணியாற்றிக் கொண்டிருந்தேன். உயர்தர வகுப்பில் இந்து நாகரிகம் கற்பிக்கத் தொடங்கிய காலம் அது. மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும்வழிகாட்டல்வகுப்புகள், வதிவிடப்பயிற்சிகள் நடத்தும் அவசியம் ஏற்பட்டது. தமிழுக்கும் சமயத்துக்கும் பொறுப்பாக நான் இருந்த காரணத்தால் அதனை நானே ஒழுங்கு செய்தேன். கருத்தரங்கு, பயிற்சி வகுப்பு, வழிகாட்டல், என்று திட்டமிட்டேன். யாழ் இந்து மகளிர் கல்லூரியில் யாவும் ஒழுங்கு செய்தேன்.ஏறக்குறைய இரண்டு வாரங்கள்வரை இந்த நிகழ்வு இடம் பெற்றது. அப்பொழுது எனக்குப் பெரும் பலமாக விளங்கினார் பேராசான் பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் அவர்கள்.அவரை அணுகி எனது எண்ணத்தைத் தெரிவித்தவுடன் இன்முககத்துடன் வந்து மிகவும் சிறப்பாக வழிகாட்டுதல்களை வழங்கி பேருதவி புரிந்தார். அவரின் கற்பித்தலும்,அணுகுமுறையும்,ஆறுதலானஉரையாடல்களும் , அறிவின் தெளிவும் , கூர்மையும்என்மனத்துள் ஆழமாகப் பதிந்தே விட்டது.

கொழும்புத்துறையில் அமைந்திருக்கும் கத்தோலிக்க குருமாரின் செமினரியில் எட்டு ஆண்டுகளுக்கு மேலாக தமிழும் இந்துக் கலாசரமும் , சைவசித்தாந்தமும் கற்பிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தேன். நான் கற்பிக்க புறப்படுமுன்னர் பேராசான் அவர்களிடம் ஆசிபெற்றென். அவரின் பல ஆலோசனைகள் எனது கற்பித்தலுக்கு அருந்துணையாக அமைந்திருந்தது.இந்த நேரத்தில் அவற்றை எல்லாம் எண்ணிப் பார்க்கின்றேன். அவர் போன்ற ஓர் ஆளுமை வருவாரா என்றும் எண்ணி ஏங்குகிறேன்.

அவரின் கற்பித்தலும் வழிகாட்டலும் பல மாணவப் பரம்பரையினை உலகெங்கணும் உருவாக்கி இருக்கிறது. அவரின் வாரிசாக பேராசிரியர் கோபாலகிருஷ்ண ஐயர் அவர்கள் இந்துநாகரிகத்துறையினை தளரவிடாமல் செய்தார்.அவரின் வழிகாட்டலில் பேராசிரியர் வேதநாதன் கலாநிதி விக்னேஸ்வரி , கலாநிதி பவநேசன் , எனப் பலர் கிளைபரப்பி யாழ்பல்கலை க்கழகத்தில் பேராசானால் கட்டி வளர்க்கப்பட்ட இந்து நாகரிகப் பீடத்தை மேலும் மேலும் உயர்த்திக்கொண்டே போகிறார்கள். விண்ணிலிருந்து பேராசான் குருக்கள் அவர்கள் தான் நட்ட விதை பெரு விருட்சமாகி சமூகத்துக்குப் பெருந்துணையாகி நிற்பதைப் பார்த்து பெருமிதம் அடைவார் என்றே எண்ணிடத் தோன்றுகிறது.

ஆளுமையாய்விளங்கியபேராசானின்மாணவர்களினால் ' பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள் ஞாபகார்த்த சபை ' என்னும் அமைப்பு நல்லூர் சிவன் கோவிலை அடித்தளமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. இச்சபையின் தலைவராக வாழ்நாட் பேராசிரியர் கலாநிதி கோபாலகிருஷ்ண ஐயரும் செயலாளராக பிரம்மஷ்ரீ ச. பத்மநாத சர்மாவும் நியமிக்கப்பட்டனர்.

2001இல்நல்லூர்சிவன்கோவிலில்யாழ்பல்கலைக்கழகத் துணைவேந்தர்பேராசிரியர் கலாநிதி பொ. பாலசுந்தரம் பிள்ளையால் ஆரம்பிக்கப்பட்ட இச்சபையின் கீழ் பேராசான் கைலாசநாதக்குருக்கள் ஆய்வு நிறுவனம் , நூல்நிலையம் என்பன சம்பிரதாய பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வாறு அமைக்கப்பட்ட சபையினால் யாழ்பல்கலைக் கழகத்தில் அமரர் பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் நினைவுப் பேருரை நிகழ்த்துவதற் கும் . அங்கு இந்து நாகரிகம் , சமஸ்கிருதம் இந்து தத்துவம் ஆகிய பாடங் களில் சிறப்புக் கலைத்தேர்வில் திறமைச் சித்தி பெறும் மாணவர்களுக்கு அன்னாரின் நினைவாகப் புலமைப்பரிசில் வழங்குவதற்கு நிதியினை வழங்கும் ஒழுங்கும் செய்யப்பட்டது.

பேராசான் குருக்கள் அவர்களது நினைவாகக் காலந்தோறும் நூல் வெளியீடு அந்தணர் கல்வி, சமூக மேம்பாட்டுக்கான பணிகளை இனங்கண்டு செயலாற்றுதல் சமஸ்கிருதக் கல்லூரி ஆரம்பித்தல் நோக்கங்களைச் செயற்படுத்தவும் இச்சபையால் தீர்மானிக்கப்பட்டது.இச்சபையினால் இதுவரை குருக்கள் அவர்களின் நினைவாக

1) கைலாசநாதம்
2) சண்டீயக்ஞபத்ததி
3) என்சரிதம்
4) கைலாஸநாதாஞ்சலி
5 )யாழ்ப்பாணத்தில் சமஸ்கிருதக் கல்வியை வளர்த்த நிறுவனங்களும் அறிஞர்களும்
6) கீர்த்தனாசதகங்கள்
7 )தகனசம் ஸ்காரம்
8) கிரியாகிரமபத்ததி பகுதி 1
9) இந்துப்பண்பாடு சில சிந்தனைகள்

ஆகிய நூல்கள் வெளியீடு செய்யப் பட்டிருக்கின்றன.

ஈழத்தில் அதுவும் யாழ்மண்ணில் - ஒரு பேராளுமை எங்கள் காலத்தில் வாழ்ந்திருக்கிறார். அந்தணராய் இருந்து அறிஞராய் ஆனவர்.ஆரவாரம் இல்லாமல் அனைத்தையும் கற்றவர், பட்டங்கள் பல பெற்றும் பரிவாரங்கள் சூழவருவதை விரும்பாதவர் ,எளி மையானவர் , இனிமையானவர், யாவராலும்வியந்துபார்க்கப்பட்டவர். அவரே பேராளுமைமிக்க பேராசிரியர் பேராசான் கா. கைலாசநாதக் குருக் கள் என்னும் அந்தணகுலத்து அருஞ்செல்வமாகும்.

# கட்சிகளாக இன்றி இனமாகச் சிந்தித்தால் தமிழ்ப் பொது வேட்பாளரே ஒரே தெரிவு

## விக்கிரமபாகு நினைவு நிகழ்ச்சியில் ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு



ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சார்பில் ஒரு பொது வேட்பாளரை நிறுத்துகின்ற முயற்சிகள் முன்னெடுக் கப்பட்டுள்ளன. இலங்கையில் தமிழர் ஒருவரால் ஒரு போதும் ஜனாதிபதியாக வர முடியாது என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால், முள்ளிவாய்க்கால் யுத்தத்தின் பின்னர் சிதறிப்போய்க் கொண்டிருக்கும் தமிழ்த்தேசிய அரசியலை, தமிழ்த்தேசிய உணர்வு நிலையை சீர் செய்யவும், ஒருமுகப்படுத்தவும் பொதுவேட்பாளரால் இயலும். இது நிகழ்ந்துவிடக்கூடாது என்பதற்காகவே தென்னிலங்கை அரசியல்வாதிகளும், சில தமிழ் அரசியல்வாதிகளும் இதனை மூர்க்கமாக எதிர்க்கிறார்கள். தமிழ் மக்கள் கட்சிகளாக அல்லாமல் இனமாகச் சிந்தித்தால் தமிழ்ப் பொதுவேட்பாளரே ஒரேயொரு தெரிவாக இருக்க முடியும் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் கலாநிதி விக்கிரமபாகு கருணரட்னவின் நினைவுகூர் நிகழ்ச்சி கடந்த ஞாயிற்றுக்கிழமை திருநெல்வேலி பிறைற் இன் திருமண மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து உரையாற்றியபோதே பொ.ஐங்கரநேசன் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

தமிழ்த்தரப்பில் ஒரு பொது வேட்பாளரை நிறுத்தவேண்டும் என்ற எண்ணக்கரு 2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் முன்வைக்கப்பட்டது. தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து அவர்களின் உரிமைப் போராட்டத்தைத் தொடர்ச்சியாக ஆதரித்துவந்த விக்கிரமபாகு கருணரட்ண தமிழ்தரப்பின் பொது வேட்பாளராக முன்மொழியப்பட்டும் இருந்தார். ஆனால் இதனைத் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் கருத்தில் எடுக்காது முள்ளிவாய்க்கால் யுத்தத்தில் நேரடியாகவே பங்கேற்ற சரத்பொன்சேகாவை ஆதரிப்பதாக முடிவெடுத்தனர.; தமிழ் மக்களைச் சரத்பொன்சேகாவுக்கு வாக்களிக்கவைத்துப் பெரும் வரலாற்றுத் தவறிழைத்தனர். தற்போது, சரத்பொன்சேகா இராணுவம் குற்றமிழைத்திருந்தால் தமிழ் மக்கள் எவ்வாறு தனக்கு வாக்களித்திருக்க முடியும் என்று கேள்வி எழுப்புகின்றார்.



மேட்டுக்குடித் தமிழ் அரசியல்வாதிகள் எப்போதும் தெற்கில் ஐக்கிய தேசியக்கட்சியையே ஆதரித்து வருகின்றார்கள். ரணில் விக்கிரமசிங்கவுக்காகவே யுத்தத்தை முன்னெடுத்த தளபதிக்கு இரத்த நெடில் அகல முன்பாக வாக்குக் கேட்டார்கள். அத்தேர்தலில் விக்கிரமபாகுகருணரட்னபோட்டியிட்டுச்சிலஆயிரக்க ணக்கான வாக்குகளையே பெற்றிருந்தார். அவருக்குத் தமிழ் மக்கள் ஆதரவளித்திருந்தால்கூட பேரினவாதத்தைஎதிர்த்துஅவரால்வெற்றிபெற்றிருக்க முடியாது. ஆனால், அவரை நாம் ஆதரித்திருந்தால் அவரைப்போன்று தமிழ் மக்களின் போராட்டத்தை ஏற்றுக்கொண்டு ஆதரிக்கக்கூடிய பல விக்கிரமபாகுக்களைத் தென்னிலங்கையில் நாம் உருவாக்கியிருக்க முடியும். இவரின் மறைவோடு சிங்கள மக்கள் மத்தியில் எங்களுக்காகப் பேசி வந்த ஒரேயொரு குரலும் இல்லாமற் போய்விட்டது.



மாகாண சபைத்தேர்தலைத் திட்டமிட்டு நடத்தாமல் விட்டவர்களே இப்பொழுது ஜனாதிபதித் தேர்தலைக் கருத்திற் கொண்டு மாகாணசபைத் தேர்தலை நடத்துவது பற்றிப் பேசுகின்றார்கள். தென்னிலங்கை ஜனாதிபதி வேட்பாளர்களுடன் பேரம் பேசுதல், கனவான ஒப்பந்தம் செய்துகொள்ளல் எல்லாம் கடந்தகாலக் கசப்பான அனுபவங்களாக எம்முன்னால் உள்ளன. தொடர்ந்தும் தவறிழைத்துக்கொண்டிருக்க முடியாது. ஜனாதிபதித் தேர்தல்களில் நாம் விட்ட தவறுகளைச் சரிசெய்ய வேண்டிய நேரம் இது. தமிழ்த்தேசிய அரசியலை நேர்செய்ய வேண்டிய தருணம் இது. தமிழ்ப் பொது வேட்பாளர் தமிழ் இனத்தின் ஒருமித்த ஒரு குறியீடு. அவர் யார்? அவரால் என்ன செய்ய முடியும்? என்று உரசிப்பார்த்துக்கொண்டு இருக்காமல் தமிழ் மக்கள் ஓர் இனமாகச் சிந்தித்து அவருக்கு வாக்களிக்க வேண்டும் என்று தெரிவித்தார்.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.08.2024இல் வெளியிடப்பெற்றது